Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00


www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 12 சனிக்கிழமை (27-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:31

# ஈரானில் பூகம்பப் பேரழிவு!

# 20 ஆயிரம் பேர் உயிரிழப்பு!!

## இடிபாடுகளுக்குள் சிக்குண்டு உயிருடன் பரிதவிக்கும் மேலும் பல்லாயிரக்கணக்கானோரை மீட்க முடியாத சிக்கல்




**தெஹ்ரான், டிசெம்பர்27**

**தென்கிழக்கு ஈரானில் நேற்று விடிகாலை இடம்பெற்ற மிகமோசமான பூகம்பத்தினால் ஒரு நகரமே முற்றாக அழிந்தது. நித்திரைப்படுக்கையில் இருந்த சுமார் இருபதாயிரம் பேர் உயிரிழந்தனர்; முப்பதாயிரம் பேர்வரை படுகாயமடைந்தனர். பாரிய கட்டட இடிபாடுகளுக்கு இடையில் உயிருடன் சிக்கிப் பரிதவிக்கும் மேலும் பல்லாயிரக் கணக்கானோரை மீட்க முடியாத அவல நிலைமை அங்கு நீடிக்கிறது.**

**தென்கிழக்கு மாகாண கேர்மனில் சரித்திர முக்கியத்துவம் மிக்க புராதன நகரமான பாம் (BAM) என்ற இடமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.**

விடிகாலை 5.27 மணிக்கு - மக்கள் நித்திரைப் படுக்கையில் இருந்த சமயம் 6.7 ரிச்டர் அளவுடைய பெரும் பூகம்பம் இந்த நகரைத் தாக்கி அழித்தது.

நகரிலிருந்த அறுபது வீதமான கட்டடங்களும், வீடுகளும் இடிந்து நொறுங்கி, சரிந்து தரை மட்டமாகி உள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்புப் பணியில் ஈடுபடுவதற்கு வெளியிடங்களிலிருந்து அங்கு தொண்டர்கள் விரைந்த வண்ணம் உள்ளனர். ஆனால், அதற்குரிய கருவிகளோ அல்லது கட்டடங்களுக்குள் ஆள்கள் புதையுண்டிருப்பதை மோப்பம் பிடித்து அறிந்து காட்டும் மோப்ப நாய்களோ இல்லாததால் அப்பணியில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

உரிய கருவிகளையும், மோப்ப நாய்களையும் ஏனைய உதவிகளையும் அவசர அவசரமாக அனுப்பிவைக்கும்படி உலக நாடுகளை ஈரான் கோரியுள்ளது.



உயிரிழந்த தனது மகளின் சடலத்தை வைத்துக்கொண்டு கதறியழும் தாய்.



மீட்புப் பணியில் இராணுவம்.

இரண்டு விமானங்களில் இக் கருவிகளையும் மோப்ப நாய்களையும் உதவியாளர்களையும் ரஷ்யா அனுப்பிவைத்துள்ளது.

கிரேக்கம், துருக்கி, ஜேர்மனி ஆகிய நாடுகளும் விரைந்து உதவிகளை அனுப்பத் தயாராகிவருகின்றன.

பூகம்பத்தால் தாக்கப்பட்ட பிரதேசங்களில் தொலைபேசி, மின்சாரம், தண்ணீர் விநியோக சேவைகள் என்பன முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

செய்மதி ஊடான ஒரு சில தொலைபேசிகள் மூலமே வெளியுலகிலிருந்து இப்பிரதேசத்துக்கு தொடர்பு கொள்ள முடிகிறது.

கூடாரம், போர்வை, மருந்து, குடிதண்ணீர், சுத்திகரிப்புக் கருவிகள் ஆகியவற்றுடன் அவசர உதவி வழங்கும் தொண்டர்களையும் ஏற்றிக்கொண்டு பல ஹெலிகொப்டர்கள் இப்பகுதிக்கு சென்றுள்ளன.

பாம் நகரிலிருந்த இரண்டு வைத்திய சாலைகளிலும் உள்ள கனிசமான கட்டடங்களும் இடிந்து வீழ்ந்துள்ளன. இதனால், வைத்தியசாலை ஊழியர்களும் பெரிதும் பாதிக்கப்பட்

(16ஆம் பக்கம் பார்க்க)

# தெற்கில் அரசியல் அதிகாரப் போட்டி நிறுத்தப்படும்வரை பேச்சுகள் இல்லை!

*நோர்வே தூதரக அதிகாரி ஊடகவியலாளர்களிடம் தகவல்*

கொழும்பு,டிசெ.27

"வடக்கில் யுத்தத்தை முழுமையாக முடித்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமேயானால் தெற்கிலுள்ள அரசியல் அதிகாரப் போட்டியை நிறுத்த வேண்டும். இலங்கையின் தலைவர் ஜனாதிபதியா, பிரதமரா என்பது தெளிவாகும் வரை சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது கடினமாகும். மனிதர்கள் போரினால் இறப்பது நின்றுவிட்டாலும் போர்கள் நிலைமை மாறவில்லை. இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமா? ஒரு சிறு சம்பவம்கூட பெரும் விபரீதத்தை ஏற்படுத்த முடியும்."

நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தோமஸ் ஸ்ராங்லண்ட் குருநாகலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:-

இலங்கையைவிட மிகவும் ஒரு சிறுநாட்டினரான நாம் மத்தியஸ்த கொள்கையை உடையவர்கள். சூடான், கௌதமாலா போன்ற மோதலில் இருந்த நாடுகளில் பிரச்சினைகளைத் தீர்த்த அனுபவம் எமக்கிருப்பதால் இலங்கை ஜனாதிபதியினதும் பிரதமரினதும் விடுதலைப் புலிகளின் தலைவரினதும் அழைப்பின் பேரில் இங்குவந்தோம்.

போரில் உயிரிழப்பது நின்றுவிட்டது. போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் நல்லசெயல்கள் ஊடகங்களில் வெளியாவதில்லை. 42 கண்காணிப்பாளர்கள் மட்டுமே உள்ளனர். குறிப்பிட்டளவு வழங்களுடன் அவர்கள் ஆகக்கூடுதலான சேவையாற்றுகின்றனர்.

இலங்கையின் எண்ணெய், கடல், கனிம வளங்களை எதிர்பார்த்தே நாம் இப்பிரச்சினையில் தலையிட்டோம் என்று குற்றஞ்சாட்டுகின்றனர். ஆயினும், கடந்த 20 ஆண்டுகளாக நாம் தெற்கிற்கு வழங்கிய உதவிகள் ஊடகங்களில் வெளியாகவில்லை.

-இவ்வாறு அவர் கூறினார்.

# பண்ணைக் கடலில் நேற்று வான் கவிழ்ந்து பெண் மரணம்!

மண்டைதீவு,டிசெ.27

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளை ஏற்றிவந்த மினிவான் ஒன்று வீதியை விட்டு விலகி பண்ணைக்கடலுக்குள் குடைசாய்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்தார்; நடத்துநர் உட்பட 7 பேர் காயமடைந்தனர்.

மண்டைதீவுச் சந்திக்கும் அல்லைப்பிட்டிச் சந்திக்கும் இடைப்பட்ட இலந்தையடிக்கு அண்மையில் நேற்றுப் பகல் 11.30 மணியளவில் வான் குடைசாய்ந்தது. முன்னே சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றை முந்திச்செல்ல முயன்றபோது எதிரே வந்த ஐஸ்கிறீம் வானுடன் உரசப்பட்டதில் நிலைகுலைந்து வான் கடலில் கவிழ்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் துவாளை 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பேரம்பலம் மகாலட்சுமி (வயது65) என்ற பெண்ணே மரணமானார்.

பிரதான பக்கவாசல் இருந்த பக்கமாக வான் குடைசாய்ந்ததில் வெளியேற வழி இல்லாது குறித்த பெண் கடல் நீரில் மூழ்கி மரணமானார். தாயாரின் கையில் இருந்த குழந்தை ஒன்றும் நீரில் மூழ்கியுள்ளது. ஆபத்தான நிலையில் அது பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

விபத்துக்குள்ளான மினிவானுக்குப் பின்னால் வந்த போக்குவரத்துச் சபை பஸ்ஸில் இருந்தவர்களும் அவ்வழியோ வந்துகொண்டிருந்த கடற்படை அம்புலன்ஸில் இருந்தவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டோரை இழிவாகப் பார்க்காதீர்கள்; ஒதுக்காதீர்கள் அவர்களையும் சமூகத்தில் ஒருவராக ஏற்று பரிவுடன் நடத்துங்கள்.

- எய்ட்ஸ் விழிப்புணர்வு

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 7 பெற்றோல் நிலையங்களில் கொள்ளை: கொள்ளையடித்தோர் உடனேயே கைது!

## வானைக் கடத்தி ஒரே நாளில் துணிகரச் செயல்

ஒரே இரவில் ஏழு பெற்றோல் நிரப்பு நிலையங்களில் கொள்ளையடித்த நான்கு இளைஞர்கள் அநுராதபுரம் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர். வான் ஒன்றைக் கடத்தியே அவர்கள் இக்கொள்ளைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட போது அவர்களிடம் 46 ஆயிரம் ரூபாவும், இரண்டு விசா கிரேடிட் காட்களும் இருந்தன. இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், ஒரு கத்தி என்பனவும் அவர்களிடம் இருந்துள்ளன.

நேற்றுமுன்தினம் இக்கொள்ளைகள் நடந்துள்ளன. மூன்று மாதங்களுக்கு முன்னரும் இவர்கள் கார் ஒன்றைக் கடத்தி நான்கு பெற்றோல் நிரப்பு நிலையங்களைக் கொள்ளையிட்டுள்ளனர். கடத்தியவானை வழியில் கைவிட்டுவிட்டு வாடகைக்கார் ஒன்றில் தப்பிச்செல்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

புத்தளம் நகரிலுள்ள தில்லையடி என்ற இடத்தில் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையம் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் இவர்களால கொள்ளையடிக்கப்பட்டது. சுமார் 15 ஆயிரம் ரூபாவை அங்கு கொள்ளையடித்துவிட்டு கொள்ளையர் ஓடிய போதிலும் பொலீஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கையால் சிலமணி நேரத்தினுள் அவர்கள் பிடிபட்டனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

சம்பவதினத்தன்று வான் ஒன்றில் வந்த நான்கு இளைஞர்கள் வானுக்கு எரிபொருள் நிரப்புமாறு தெரிவித்தனராம். நிலைய ஊழியர் எரிபொருளை நிரப்பிவிட்டு அதற்கான பணத்தைக் கேட்டபோது திடீரென கத்தியைக் காட்டி பயமுறுத்திவிட்டு மேசையில் இருந்த பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனராம்.

ஊழியர் உடனே கொள்ளை குறித்து பொலீஸாருக்குத் தெரிவிக்கவே உடனடியாகச் செயலில் இறங்கிய புத்தளம் பொலீஸார் அனைத்துப் பொலீஸ் நிலையங்களுக்கும் இது பற்றி அறிவித்தனர். அதனையடுத்து புத்தளம் - அநுராதபுரம் பாதையில் கலாஓயாவுக்கு அருகே அமைந்துள்ள பொலீஸ் சோதனை முகாமில் அவர்களின் வாடகைக்கார் நிறுத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் மற்றும் புத்தளம் பொலீஸார் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

### கிணற்றில் தவறி வீழ்ந்து வயோதிபப் பெண் மரணம்!

யாழ்ப்பாணம்,டிசெ.27

தண்ணீர் அள்ளியபோது கிணற்றில் தவறிவீழ்ந்து உயிரிழந்ததாகத் தெரிவித்து வயோதிபப்பெண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மல்லாகம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சரவணமுத்து சிவபாக்கியம் (வயது 75) என்ற வயோதிபப் பெண்ணே மரணமானவராவார்.

நேற்று இடம்பெற்ற மரணவிசாரணை, பிரேத பரிசோதனையைத் தொடர்ந்து, சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-15)

# பண்டிகைக் காலங்களில் சர்வதேச அழைப்புக்கு சலுகை

## ரெலிகொம் நிறுவனம் வழங்குகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.27

பண்டிகைக் காலத்தில் சர்வதேச அழைப்புகளுக்கு சலுகை ஒன்றை ரெலிகொம் நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் முதலாம் திகதி எடுக்கப்படும் சர்வதேச அழைப்புகளுக்கு 20வீத கழிவு வழங்கப்படும்.

பிரத்தியேக நேர அட்டை (Extra Timecard) மூலம் எடுக்கப்படும் அழைப்புகளுக்கும் இந்தச்சலுகை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 15ஆம் திகதி முதல் இந்த அட்டை மூலம் பெறப்படுகின்ற சர்வதேச அழைப்புகளுக்கு நிமிடத்துக்கு 12ரூபாவே அறவிடப்படுகிறது. அடுத்த மாதம் 15ஆம் திகதிவரை இந்தச் சலுகை தொடரும் என்று ரெலிகொம் அறிவித்துள்ளது.

மேலதிக விவரங்களை 222 2240 அல்லது 222 2232 இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெறலாம் எனவும தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

### தங்கநகை கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.27

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் தங்கநகை ஒன்று நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலை அலுவலகத்தில் அது ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் நேரில் வந்து அடையாளம் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)




ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தவேளை நேற்றுப் பகல் பயணிகள் வான் ஒன்று வீதியை விட்டு விலகி பண்ணைக் கடலில் கவிழ்ந்தது. 65 வயதுப் பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். கடலில் வீழ்ந்து கிடக்கும் வான் படத்தில்.

*(படம்: அலுவலகச் செய்தியாளர்)*

# பிரதேச செயலாளர்கள் நேற்றும் கடமைகளைப் பகிஷ்கரித்தனர்!

## புளத்சிங்கள பொலீஸ் இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள் நேற்றும் தமது கடமைகளைப் பகிஷ்கரித்தனர். இதனால் பிரதேச செயலக அலுவல்கள் பாதிக்கப்பட்டன.

புளத்சிங்கள பிரதேச செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவத்தை ஆட்சேபித்து வேலைப் பகிஷ்கரிப்பில் இவர்கள் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

இந்தச்சம்பவம் தொடர்பாக ஆராய பிரதமர், குழுவொன்றை நியமித்துள்ள போதும் இவர்கள் தமது பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையே, புளத்சிங்கள பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கே.எஸ்.விஜயவர்த்தன இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரே இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

விசாரணையை இவர் சீராக நடத்தவில்லை என்று பல தரப்புகளில் இருந்தும் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன என்றும், தேசியப் பொலீஸ் ஆணைக்குழு அவரை இடமாற்றம் செய்திருப்பதாகவும் களுத்துறை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உபாலி குணசேகர தெரிவித்தார்.

### கட்டடத் திறப்பு விழா

புனரமைப்புச் செய்யப்பட்ட மட்டுவில் மத்தி பொதுநோக்கு மண்டபத் திறப்பு விழாவும் கலைவாணி மழலைகள் கல்விப் பூங்காவின் 21ஆவது ஆண்டு விழாவும் இன்று மாலை 4.00மணிக்கு நிலைய கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் ஸ்உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குநர் அருட்திரு. கி.ஜோ.ஜெயக்குமார், சாவகச்சேரி அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன், மண்டபம் அமைக்க காணி வழங்கிய க.கந்தசாமி ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-117-31)

### எண்ணெய் ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிவு

கொலன்னாவ எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய ஊழியர்கள் நேற்று மேற்கொண்ட வேலைப்பகிஷ்கரிப்பு, நிர்வாகம் நடத்திய பேச்சுக்களையடுத்து நேற்றுக் கைவிடப்பட்டது.

ஊழியர்கள் நேற்றுக்காலை தமது நாளாந்தக் கடமைகளைப் பகிஷ்கரித்தனர். 2000ஆம் ஆண்டு முதல் நிலுவையாகவுள்ள மேலதிக கொடுப்பனவுகளை ஒரு மாத காலத்துக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு நிர்வாகம் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்தது. எனினும், அது தொடர்பான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று கூறியே ஊழியர்கள் வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். வேலைப் பகிஷ்கரிப்புச் செய்தி காலையில் வெளியானவுடன் பெற்றோல் நிரப்பு நிலையங்களில் வாகனங்களில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

# ஜனவரியிலிருந்து ரயில் கட்டணங்கள் 40 முதல் 60 வீதம்வரை அதிகரிப்பு

ரயில் கட்டணங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 40சதவீதம் முதல் 60 சதவீதம் வரை அதிகரிக்கப்படுமென ரயில்வே அதிகாரசபைத் தலைவர் தெரிவித்தார்.

ரயில் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதையடுத்து, போக்குவரத்து அமைச்சு ரயில்கட்டணங்களை இன்று முதல் அதிகரிக்கும்படி கேட்டுள்ளது. இருந்தும் ரயில் கட்டணங்களை ஜனவரி முதல் அதிகரிப்பதென அதிகாரசபை தீர்மானித்திருக்கிறது. அதிகார சபைக்கும் சிலவிதி முறைகள் இருக்கின்றன. எமது பணிப்பாளர்சபை கூடி கட்டண அதிகரிப்பு தொடர்பாக ஆராயவேண்டும். ரயில் நிலைய அதிபர்களுக்கு அதிகரிக்கப்படும் புதிய கட்டண விபரங்களை அறிவிக்க வேண்டும். இதனால் ஜனவரி முதல் வாரத்திலேயே கட்டணங்கள் அதிகரிக்கப் படுமென்றும் அதிகாரசபைத் தலைவர் மேலும் கூறினார்.

நீண்ட தூரப் பயணங்களுக்கான ரயில் கட்டணங்கள் 60 சதவீதத்தாலும் கொழும்பைச்சுற்றியுள்ள குறுகிய தூர பயணங்களுக்கான கட்டணங்கள் 40 சதவீதத்தாலும் அதிகரிக்கப்படும்.

# செங்கலடி மாணவியின் கொலை சந்தேக நபர் புலிகளால் கைது!

கடந்த 19ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலைசெய்யப்பட்ட செங்கலடி, ஆண்டான்குளத்தைச் சேர்ந்த மாணவி சாந்தலிங்கம் நிசாந்தினி (வயது-17) என்பவரது கொலை தொடர்பான சந்தேகநபர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலையின் பின் தலைமறைவாகியிருந்த கந்தையா யோகராசா (அன்ரனி) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். இவர் கடந்த 22ஆம் திகதி விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது தனது குற்றத்தினை ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெரிவருகின்றது.

# யாழ். குடாநாட்டில் புதுவிதக் காய்ச்சல்

யாழ். குடாநாட்டில் தற்போது புதுவிதக் காய்ச்சல் ஒன்று பரவிவருவதாக யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுவரும் நோயாளர்களில் 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள் ஏதோவொரு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர். வெளிநோயாளர் பிரிவிலும் பல நூற்றுக்கணக்கானோர் காய்ச்சலுக்காக சிகிச்சை பெற்றுள்ளனர்.

மலேரியா, டெங்கு, நெருப்புக் காய்ச்சல் போன்ற உடனடியாக இனங்காண முடியாத காய்ச்சலினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் சற்று அதிகரித்திருப்பதாக வைத்தியசாலைப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

மலேரியா, நெருப்புக் காய்ச்சலுக்கான அறிகுறிகளுடன் புதுவகைக் காய்ச்சல் காணப்படுவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மழையை அடுத்து ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக இக்காய்ச்சல் பரவலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர்கள், பெரியவர்கள் என அனைத்துத்தரப்பினரும் இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்படுகின்றனர்.

காய்ச்சல் நோயாளர்களின் அதிகரிப்பினால் வைத்தியசாலையில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. நோயாளர், விடுதிகளின் நடைபாதைகளிலும் கட்டில்களின் இடையிலும் தங்கியிருந்தே அவர்கள் சிகிச்சை பெறவேண்டிய ஒருநிலை ஏற்பட்டுள்ளது. (ப-6-15-139)

# சைக்கிள் - டிராக்டர் விபத்து சம்பவ இடத்தில் பெண் பலி!

ஏறாவூர்,டிசெ.27

சந்திவெளி பிரதான வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ஒரு பெண் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டார்.

சந்திவெளி புதுப்பிள்ளையார் ஆலயத்திற்கு எதிரே செங்கல் ஏற்றிவந்த டிராக்டர் வண்டியுடன் சைக்கிளில் வந்த இரண்டு பெண்கள் மோதுண்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். படுகாயமடைந்த மற்றொருபெண் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

டிராக்டர் சாரதியைக் கைதுசெய்துள்ள வாழைச்சேனை பொலீஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஜனவரியில் 'பொங்குதமிழ்' நிகழ்வு

## பிரமாண்டமாக நடத்த ஏற்பாடுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 'பொங்கு தமிழ்' நிகழ்வை மிகப் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை கிழக்கு பல்கலைக்கழக சமூகம் மேற்கொண்டு வருகிறது.

எதிர்வரும் தைப்பொங்கலின் பின்பு இந்தப் 'பொங்குதமிழ்' கிழக்குப பல்கலைக்கழகத்தில் உணர்வு பூர்வமாகவும் எழுச்சி பூர்வமாகவும் நடைபெறவுள்ளது.

இம்முறை தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்கள், உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்கள், கல்விச் சமூகம், புத்திஜீவிகள், பொதுமக்கள் எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக 'பொங்குதமிழ்' ஏற்பாட்டுக் குழுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டு நிற்கும் அரசியல் நெருக்கடியான சூழ்நிலையில் சமாதானப் பேச்சை மீள ஆரம்பிப்பதை வலியுறுத்தி இப்பொங்குதமிழ் நிகழ்வு நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 14 வருடங்களாக பொலீஸ் சேவையிலிருக்கும் ஆனால்

# 350 மலையக இளைஞர்களுக்கு இன்றுவரை நிரந்தர நியமனமில்லை!

மலையகத்தில் 14 வருடங்களுக்கு முன்னர் பொலீஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 350 மலையக இளைஞர்களின் சேவை இன்றுவரை நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் ரிசர்வ் சேவையிலேயே அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இக்காலப் பகுதியில சேவைக்கமர்த்தப்பட்ட பெரும்பான்மையின இளைஞர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மலையகத்தில் உள்ள எல்லா பொலீஸ் நிலையங்களிலும் தமிழ் பேசும் பொலீஸார் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் பேரில் 1989ஆம் ஆண்டு முதன் முறையாக மலையக இளைஞர்கள் பொலீஸ் சேவையில் சேர்க்கப்பட்டனர். இவர்களுக்கு அஸ்கிரிய, குண்டசாலை, ஹட்டன் ஆகிய இடங்களில் உள்ள பொலீஸ் பயிற்சிப் பாடசாலைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அவர்கள் போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியடைந்துள்ளனர். இவர்களில் 300 பொலீஸ் கான்ஸ்டபிள்களும், 15 சப் இன்ஸ்பெக்டர்களும், 35 பொலீஸ் இன்ஸ்பெக்டர்களும் அடங்குவர்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் எந்த ஒரு பொலீஸ் நிலையங்களுக்கும் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்படவில்லை.

ஆனால், சப் இன்ஸ்பெக்டர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட பெரும்பான்மையினத்தவர் பலர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடைய சேவை நிரந்தரமாக்கப்படாவிட்டால் ஓய்வூதியம், மேலதிகக் கொடுப்பனவு, பதவி உயர்வு போன்றவற்றைப் பெற முடியாத நிலை தொடரும் தமது நியமனங்கள் தொடர்பாக பொலீஸ்மா அதிபரிடம் அவர்கள் நேரடியாக கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

### மரம் சாய்ந்தது

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் அருகே இராமநாதன் வீதியோரமாக நின்ற மரம் மீது நேற்றுமுன்தினவிரவு ஹண்டர் வாகனம் ஒன்று மோதியதில் மரம் பாறி வீழ்ந்தது.

பலஆண்டுகாலம் பழமை வாய்ந்த அந்த மரம் ஹண்டரின் மேல் வீழ்ந்த போதும் சாரதி காயங்கள் ஏதுமின்றித் தப்பிக்கொண்டார்.

மரம் வீழ்ந்ததால் தொலைபேசி இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டிருந்தன. (ம-6)

# ஈரானில் பயங்கரப் பூமியதிர்ச்சி!

தெஹ்ரான்,டிசெ.27

ஈரானில் நேற்று அதிகாலை 5.27 மணிக்கு (இலங்கை நேரப்படி 8மணி) சக்திவாய்ந்த பூமியதிர்ச்சி ஏற்பட்டது. இதில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப் படுகிறது.

தென்பகுதி நகரான பாம் மற்றும் தென்கிழக்கு நகர்களை பூமியதிர்ச்சி கடுமையாகத் தாக்கியது என்று ஈரானிய அரசு தெரிவித்தது. எனினும், இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை உடனடியாக கணிப்பிட முடியவில்லை என்று அது தெரிவித்தது.

6.7 ரிச்டர் அளவில் பதிவாகிய இந்தப் பூமியதிர்ச்சியில் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம் என்று அரச செய்தி தொடர்பாளர் ஹோஷெரோ தெரிவித்தார்.

பாம்நகரையே பூமியதிர்ச்சி கடுமையாகத் தாக்கியது. அங்குள்ள 80ஆயிரத்திற்கும் மேற்பட்டோரின் நிலை குறித்து எதுவும் தெரியவில்லை என்று அந்நாட்டு தனியார் தொலைக் காட்சியொன்று தெரிவித்தது.


இந்த நகரிலுள்ள ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகக் காட்சியளிக்கின்றன. அதிகாலையில் பூமியதிர்ச்சி ஏற்பட்டதால் வீடுகளுக்குள்ளேயே பலர் அகப்பட்டுள்ளனர். இப்பகுதியில் இருந்த 60 சதவதமான வடுகள் தரைமட்டமாகக் காட்சியளிக்கின்றன என்று ஈரானிய அரச வானொலி நேற்று மாலை அறிவித்தது.

அவர்களை மீட்க மீட்புப் படையினர் அங்கு விரைந்துள்ளனர். வைத்தியசாலைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப் பட்டவர்கள் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் மீட்கப்படுகின்றனர். இப்பகுதிகளில் சுற்றுலாப் பயணிகள் அதிகமானோர் தங்கியிருந்தனர் என்றும் அவர்களின் நிலை குறித்து இதுவரை எதுவும் தெரியவில்லை என்றும் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1978 ஆம் ஆண்டு இப்பகுதியில் 7.7ரிச்டர் அளவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. அதில் 25ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.


ஈரான் பூகம்பத்தில் படுகாயமடைந்த ஒருவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்.


நத்தார் பண்டிகையையொட்டி வத்திக்கான் சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் விசேட ஆராதனை நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது. ஆராதனையைத் தொடர்ந்து பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் நத்தார் உரை நிகழ்த்துகிறார்.

# ஈராக்கில் மேலும் இரண்டு அமெரிக்கப் படையினர் பலி!

## ஜப்பான் படை பக்தாத்தை சென்றடைந்தது

பக்தாத்,டிசெ.27

ஈராக்கில் மேலும் இரண்டு அமெரிக்கப்படையினர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் நான்கு அமெரிக்கப் படையினர் மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தனர்.

தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்கப் படையினரின் தளம் ஒன்றைக் குறிவைத்து நேற்று முதலில் ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அதனையடுத்து, வீதிரோந்துப் பணிக்கென மேற்படி முகாமில் இருந்து புறப்பட்ட படையினரைக் குறிவைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று அங்குள்ள அமெரிக்கப் படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியை சுற்றிவளைத்த படையினர் சந்தேகத்திற்கிடமான வகையில் 20 பேரைக் கைதுசெய்தனர்.

ஈராக் மீதான போர் முடிந்துவிட்டதாக ஜனாதிபதி புஷ் அறிவித்ததன் பின்னர் இதுவரை 208 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்; பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், தனது நாட்டு மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஜப்பானிய அரசு தனது படையை நேற்று பக்தாத்திற்கு அனுப்பியது. முதற்கட்டமாக 800 படையினர் அங்கு விரைந்துள்ளனர்.

(ஓ)

# 'பீகிள்' கலத்துடன் தொடர்புகொள்ளும் நேற்றைய முயற்சியும் தோல்வியடைந்தது!

லண்டன்,டிசெ.27

செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்கென மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலத்தில் இருந்து பிரிந்த பீகிள் - 2 ஆய்வுக் கலத்திலிருந்து இதுவரை பூமிக்கு எதுவித சமிக்ஞையும் அனுப்பப்படவில்லை. இது விஞ்ஞானிகளுக்கு கடும் ஏமாற்றமளித்துள்ளது.

இரண்டாவது தடவையாக நேற்று பீகிள் ஆய்வுக்கலத்துடன் தொடர்பு கொள்ள ஈசா ஆய்வுமையத்தில் விஞ்ஞானிகள் கடும் முயற்சி மேற்கொண்டனர். ஆனால், அதுவும் பயனளிக்கவில்லை.

செவ்வாய் கிரகத்தில் பீகிள் தரையிறங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், எவ்வாறான சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்பது குறித்து அவர்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

பீகிள் ஆய்வுக்கலம் கிறிஸ்மஸ் தினத்தில் தரையிறங்கியிருக்கவேண்டும். ஆனால், இதுவரை அது தரையிறங்காதது பிரிட்டிஷ் விஞ்ஞானிகளுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

"பீகிளிலிருந்து இதுவரை சமிக்ஞை கிடைக்கவில்லை. அதற்காக பிரிட்டிஷ் விஞ்ஞானிகளின் முயற்சி இதோடு முடிந்துவிட்டது என்று எவரும் கருதலாகாது. தொடர்ந்து எமது முயற்சி நடைபெறும். பீகிளை விரைவில் கண்டுபிடிப்போம். குறிப்பிட்ட தினத்தில் பீகிள் தரையிறங்காததால் இந்த முயற்சி தோல்வியடைந்து விட்டது என்று கூறமுடியாது"

- என்று பீகிள் ஆய்வுக்கலத்தின் ஆராய்ச்சிக் குழுத் தலைவர் கொலிங் பில்லிங்கர் தெரிவித்தார்.

அதேநேரம், பீகிளைத் தாங்கிச் சென்ற மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலத்தில் இருந்தும் இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்று ஆராய்ச்சிக் குழுவின் செய்தித் தொடர்பாளர் பீட்டர் பாரட் நேற்று தெரிவித்தார்.

எனினும், பீகிள் ஆய்வுக் கலத்திலிருந்து சமிக்ஞை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விஞ்ஞானிகள் இருபத்திநான்கு மணிநேரமும் ஈசா ஆய்வு மையத்தில் காத்திருக்கின்றனர்.

ஆய்வுக்கலம் தரையிறங்கிய பின் அது அனுப்பும் தகவலைப் பொறுத்தே அது வெற்றிகரமாகத் தரையிறங்கியதா என்பது குறித்து தெரியவரும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

(ஓ)

# தன்னைக் கொல்ல முயற்சிப்பது அல்கெய்டா என்கிறார் முஷாரப்

இஸ்லாமாபாத்,டிசெ.27

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பைக் கொலை செய்வதற்கு நடக்கும் முயற்சிகளின் பின்னணியில் அல்கெய்டா இயக்கத்திற்கு தொடர்பிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

முஷாரப்பைக் குறிவைத்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது. ஏற்கனவே நடந்த கொலை முயற்சியில் தப்பியது போலவே இம்முறையும் அவர் காயமின்றித் தப்பியுள்ளார்.

பாகிஸ்தானில் சார்க் மாநாடு எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாக உள்ள நிலையில், முஷாரப்பைக் குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப் படுவது, சார்க் மாநாட்டுக்குச் செல்லும் ஏனைய நாடுகளின் தலைவர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இத்தாக்குதல் நடந்து சில மணி நேரங்களில் தொலைக்காட்சியில் உரையாற்றிய முஷாரப் கூறியதாவது:-

தீவிரவாதிகள் என்னைக் கொல்லத் துடிக்கிறார்கள். சார்க் நாட்டுத் தலைவர்களைக் குறிவைத்து இந்தத் தாக்குதல்கள் நடைபெறுகின்றன என்று கூறமுடியாது.

சார்க் மாநாடு திட்டமிட்டபடி நடக்கும். அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் இப்போதே மேற்கொள்ளப்படுகின்றன.

அடுத்தடுத்து தற்கொலைப்படைத் தாக்குதல்கள் நடைபெறுவதைக் காரணங்காட்டி பாகிஸ்தான் மக்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழ்கிறார்கள் என்று கூறுவதை ஏற்கமுடியாது. பாதுகாப்பு ஏற்பாடுகளில் எந்தக் குறைபாடும் இல்லை.


தீவிரவாதிகளின் தாக்குதலைத் தடுத்த பொலீஸார் மூவர் உயிரிழந்துள்ளனர். பாதுகாப்பு விடயத்தில் பொலீஸார் எச்சரிக்கையுடன் இருப்பதை இதன்மூலம் உணர்ந்துகொள்ளலாம். தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல்களுக்காக ஊடுருவும் போது அவர்களை யாராலும் தடுக்க முடியாது.

தீவிரவாதிகளின் இத்தகைய தாக்குதல்களால் பாகிஸ்தானுக்கும இஸ்லாத்துக்கும் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. அல்கெய்டா தீவிரவாதிகளுடன் இணைந்து இருக்கின்ற தீவிரவாதிகள் இத்தகைய தாக்குதல்களில் ஈடுபடுவது தெரியவந்துள்ளது.

தீவிரவாதிகள் ஏதோ ஒரு தீர்க்கமான முடிவுடன், துணிச்சலாகத் தற்கொலைத்தாக்குதல் நடத்துகின்றனர். அவர்களின் நடவடிக்கைக்கு நான் தடையாக இருப்பதால் என்னை அகற்ற நினைக்கின்றனர்.

தீவிரவாதிகளின் தாக்குதல்களால் நான் ஒருபோதும் மன உறுதியை இழக்கமாட்டேன். தீவிரவாதிகளை ஒழிக்க நான் தொடர்ந்து போராடுவேன் - என்றார்.

(ஓ)


விபத்துக்குள்ளான லெபனான் விமானத்தின் சிதைந்த பகுதிகள் கடலில் விழ்ந்துகிடக்கின்றன.

# லெபனான் விமானம் கடலில் வீழ்ந்தது; 90 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்!

காட்னூ,டிசெ.27

மேற்கு ஆபிரிக்க நாடான பெனினில் இருந்து லெபனானுக்கு புறப்பட்ட விமானம், புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விபத்துக்குள்ளாகிக் கடலில் வீழ்ந்து நொறுங்கியது. இந்த விபத்தில் அதில் பயணித்த 90இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

லெபனான் நாட்டிற்குச் சொந்தமான போயிங் 707 ரக விமானம் 150 பயணிகள் மற்றும் விமான ஊழியர்களுடன் பெனினில் உள்ள காட்னூ விமான நிலையத்திலிருந்து கிளம்பியது. தரையை விட்டு மேலேழுந்த சிறிது நேரத்திலேயே அது அப்பகுதியிலிருந்த கடலில் வீழ்ந்து நொறுங்கியது.

ஓடுபாதையைவிட்டு மேலெழும்புவதில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே விமானம் வீழ்ந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஓடுபாதையில் இருந்து மேலெழுந்தவுடன் விமானம் கட்டுப்பாட்டை இழந்து அங்குமிங்குமாகப் பறந்தது. விமானத்தை தரையிறக்க விமானி உடனடியாக முயன்றார். ஆனால், விமானம் அங்கிருந்த உயரமான கட்டடத்துடன் மோதியது. இதனால் அது தீப்பற்றியது. தீப்பற்றிய நிலையில் விமான நிலைய வளாகத்தைத் தாண்டி - இரண்டாக உடைந்து - கடலில் வீழ்ந்தது. விமானம் மோதிய கட்டடமும் பலத்த சேதமடைந்தது.

கடலில் வீழ்ந்த பயணிகளை மீட்பதற்காக மீனவர்கள் படகுகளில் விரைந்தனர். இதுவரை, 22பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். 90 சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. ஏனையோரைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு கடற்கரைக்கு சுற்றுலா வந்தவர்களும் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடலில் வீழ்ந்த விமானத்தின் சிதைந்த பாகங்கள் கரையொதுங்கியுள்ளன. சடலங்கள் சிலவும் கரையொதுங்கின. கடற்கரையில் மயங்கிக் கிடந்த விமானப் பயணிகள் சிலர் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டனர். மீட்கப்பட்ட அனைவரும் காயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் லெபனானைச் சேர்ந்தவர்கள். விடுமுறையைக் கழிப்பதற்காக அவர்கள் பெனினில் இருந்து தாயகம் திரும்பும்போது இந்த விபத்து நடந்துள்ளது.

விபத்துக்குள்ளான இந்த விமானம் மிகவும் தரம் குறைந்தது என்றும், அளவுக்கு அதிகமாக அதில் பயணிகளை ஏற்றியதால் இந்த விபத்து நேர்ந்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

முன்னதாக, கினியன் நாட்டுத் தலைநகர் கொனக்ரியிலிருந்து 71 பயணிகளை ஏற்றியவாறு புறப்பட்ட விமானம்; தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சியாராலியோன் நாட்டுத் தலைநகரான ப்ரீட்டௌனில் தரையிறக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ஓ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் கிளேசிக் SL ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.கங்காதரன், 6, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (26353)

யாழ்நகர மத்தியில் பிரபல பாடசாலைக்கு அண்மையில் சகலவசதிகளுடன் கூடிய வீடும் அதனுடன் இணைந்த வீடும் (Annex) உடன் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு நேரில் தொடர்பு: திருமதி ஸ்ரீ ஜெயதேவி பஞ்சலிங்கம், இல.79, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 6571. (26351)

### இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் சுகாதார முறைப்படி உடன சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (26357)

### வகுப்புகள்

தரம்7 முதல் O/L வரை English Language, தரம் 10,11 English Literature மற்றும் Business English for School Leavers பாடசாலை அனுபவம்மிக்க ஆசிரியரால் கற்பிக்கப்படும் வகுப்புகள் உடனடியாக ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: 16, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குளி.(26347)

### ஆங்கிலக்கல்வி

மிகவும் இலகுவான முறையில் அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். மற்றும் 2004ஆம ஆண்டு G.C.E. O/L English வகுப்புக்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்க முடியும். தொடர்பு பார்த்தீபன் இல.195/5, கில்னர்லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (26126)

### தவறிவிட்டது

அச்சுவேலியைச் சேர்ந்த நடராசா சர்வானந்தன் என்பவருடைய தேசிய அடையாள அ. (இல.: 781222585V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிபத்திரம் என்பன தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள இல.3, செட்டித்தெரு, நல்லூர் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (26341)

### இசைக்குறிப்புகள்

Organ, Guitar, வயலின், வீணை, புல்லாங்குழல் போன்ற வாத்தியங்களிற்கான புதிய சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள் (பாகம்1-20) வெளிவந்துள்ளன. தொடர்பு: S.S. ரஜீந்திரன்,75,கோவில் வீதி, நல்லூர் (Green Park அருகில்) T.P.: 0777 031293. (26346)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் விலைரூபா 42, Prima பேட்டுக் குஞ்சுகள விலை ரூபா 62, 05.01.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறை கிளையிலும் விநியோகிக்கப்படும் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (26356)

### காணவில்லை

கண் திறக்காத நிலையிலுள்ள 5 குட்டிகளின் தாயான கறுப்புநிற காலில் Brown நிறமுடைய கட்டை இன டைசோன் நாயை 25.12.2003 முதல் காணவில்லை. அதுபற்றி தகவல் அறிந்தவர்கள் மனிதாபிமான முறையில் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். V.குணபாகன், 343,K.K.S வீதி, யாழ்ப்பாணம் அல்லது 33,2ஆவது, விதானையார் ஒழுங்கை, சுண்டிக்குளி. T.P.: 3353. (26371)

## மருந்தாளர் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,டிசெ.27

குடாநாட்டில் மருந்தாளர்களுக்கு நிலவுகின்ற பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் கே. ரி.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

இதற்கென வெளிவாரி மருந்தாளர் பயிற்சிநெறி ஒன்று நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சிநெறி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சி.குமாரவேற்பிள்ளை பயிற்சிநெறியை ஆரம்பித்து வைக்க உள்ளார். பயிற்சிநெறியில் கலந்து கொள்ளவுள்ளோர்களுக்கான அனுமதிக்கடிதங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. (ஒ-10)

### பழைய ஓடுகள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பழைய ஓடுகள் உடனே விற்பனைக்கு உண்டு.

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*
375/3, முத்துத்தம்பி ஒழுங்கை
*(ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்)*
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-32326) (25-13-24-21)

### தவறிவிட்டது

ஏழாலை மேற்கு, ஏழாலையைச் சேர்ந்த கார்த்திகேசு சிவராசன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0906000124), சர்வோதய ஆவணங்கள் என்பன நெல்லியடிக்கும் வல்லைக்கும் இடையில் 24.12.2003 புதனன்று பேர்கடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.3, பிளேச்சர்ஸ் வீதி, யாழ்ப்பாணம், சர்வோதயத்தில் ஒப்படைத்து உதவவும்.

(சி-32325) (25-21-13)

### விற்பனைக்கு

நன்கு மறுசீரமைக்கப்பெற்ற கனோன் NP 1215 போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. உதிரிப்பாகங்களும், ரோணர் என்பனவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
117, அரசடி வீதி,
கந்தர்மடம்.
0777 737312
(26349) (25-12-13-32)

### நெல்லியடிக்கு வருகிறது

ASIAN COMPUTER SYSTEMS

ஜனவரி முதல் வாரத்தில்

### யாழ்ப்பாணத்தில் ஜோறி வருகை

**இலவச கலந்துரையாடல்**

(தியானம் - உளவியல் - அமைதி)

**இடம்: 3 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள நிலையத்தில்**

**காலம்: 27-12-03 சனிக்கிழமை (இன்று காலை 9.00)**

*ஜப்பானில் இருந்து வருகைதந்துள்ள "சேக்யூ. கியூசேச் நிறுவன அதிகாரிகள் கலந்து உரையாற்றுவார்கள்.*

(ஒருவருடைய ஆன்மீக. சரீர சம்பந்தமான சுகத்தை பிரபஞ்சத்திலுள்ள தெய்வீக சக்தி மூலம் மேம்படுத்துவதே - ஜோறி)

(34-13-21-24) (C/32327)

### புத்தாண்டு மலிவு விற்பனை

*யாழ். நகர மக்களே!* *ஓர் அரிய வாய்ப்பு!!*

**டிசெம்பர் 1 முதல் 31 வரை விசேட கழிவு**

நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும் விசேடகழிவு வழங்கப்படும்.

**நாளை என்று தள்ளிப் போடாமல் இன்றே விரையுங்கள்.**

**லைடன் புடைவை நிலையம்,**

**இல. 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(C/31966) ☎ 222 2381. (34-13-21-24)

*வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நிலையம் திறந்திருக்கும்*



### சபரீச ஐயப்பன் தேவஸ்தானம், கோண்டாவில்

## மகரஜோதி மண்டல பூஜை பூர்த்தி விழா

காலம்: **27.12.2003** சனிக்கிழமை

இருமுடி கட்டி, பதினெட்டாம் படியேறி நெய் அபிஷேகம் நடைபெறும். காலை 7 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் இருமுடிகட்டி மல்லாகம் பழம் பிள்ளையார், சுன்னாகம். காங்கேசன்துறை வீதி ஊடாக ஐயனார் ஆலயம், முனியப்பர் ஆலயம், ஆஞ்சநேயர் ஆலயம் தரிசனம் கண்டு கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்திற்கு வந்து பதினெட்டுப்படி பூசை நடைபெறும்.

சகல ஐயப்ப சுவாமிகள் அடியார்களும் வந்து ஐயப்பன் திருவருள் பெறுவீர்களாக.

**- ஐயப்பன் தேவஸ்தானம்.**

(26368) (25-21-13)

## மரண அறிவித்தல்கள்

### செபஸ்தியாம்பிள்ளை மைக்கல்தாசன்

நாவாந்துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட கலைஞர் திலகம் செபஸ்தியாம்பிள்ளை மைக்கல்தாசன் அவர்கள் நேற்று (26.12.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மாசில்லாவின் (தங்கரத்தினம்) அன்புக் கணவரும் புஸ்பா (கனடா), றூபா, ராஜா (நோர்வே), டக்ளஸ்தாசன் (பாபு - B.A. யாழ். பல்கலைக்கழகம், Dip. in Computer, Dip. in Account - நோர்வே), நிக்சன (நோர்வே), பிரபு (அருட்சகோதரர் - பிலிப்பைன்ஸ்), அசோக் ஆகியோரின் அன்புத் தந்தையும் அண்ணாவியார் செ.பெலிக்கான், செ.பிரான்சிஸ் (சின்னக்கிளி), ஞானசோதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வீ.எதிர்வீரசிங்கம் (கனடா), மு.கறோ ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2003) சனிக்கிழமை பி.ப.4 மணிக்கு பரலோக மாதா ஆலயத்தில் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சென்.மேரிஸ் வீதி,*
*நாவாந்துறை வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (26366) (25-13-24-21)

தகவல்:
டானியல் சௌந்திரன்

நயினாதீவு

### முத்தர் இராமலிங்கம் அம்பலவாணர்

(உரிமையாளர், லெட்சுமி பவான் ஹோட்டல், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11, அம்பலவாணர் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் முத்தர் இராமலிங்கம் அம்பலவாணர் அவர்கள் 24.12.2003 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசபிள்ளை - அபிராமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, சிவானந்தராசா, சர்வானந்தராசா, நித்தியானந்தராசா, சச்சிதானந்தராசா, பஞ்சானந்தராசா, காலஞ்சென்ற தயானந்தராசா, சதானந்தராசா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சச்சிதானந்தன், மரகதமணி, தவரூபராணி, சகுந்தலா தேவி, ஜெயலலிதா, ரோகிணி, கிருபாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும அனுஷா, விமல்ராஜ், அர்ச்சனா, அபிஷிகா, அமலினி, ஞானகன், நிர்சாந்த், அபிராமி, அபிர்ஷிணா, சந்தியா, ஆதித்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற கனகம்மா, தங்கமுத்து, கந்தட்டு, நடராசா, காலஞ்சென்றவர்களான முத்தையா, சவுந்தரம் மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, சோமசுந்தரம், காலஞ்சென்ற சிவபோகம், புவனேஸ்வரி, கிருஷ்ணவதி, முத்தையா, பரமானந்தம், திருமதி கனகசபை மங்களேஸ்வரி, சந்திரசேகரம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, திருமதி விசாலாட்சி பூபாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளவத்தை, 83/3, W.A.சில்வா மாவத்தையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (28.12.2003) ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகப் பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அம்பலவாணர் சிவானந்தராசா தொலைபேசி 2594324.
83/3, W.A.சில்வா மாவத்தை, வெள்ளவத்தை.
தம்பிமுத்து சச்சிதானந்தன், தொலைபேசி: 2594677,
அம்பலவாணர் சச்சிதானந்தராசா (லண்டன்)
தொலைபேசி: 020 85?0 7704.

(26370)(34-13-21-24)

### சேர் பொன்.இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம்

சிவாச்சார்ய குருகுலம்
யாழ்.பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்
திருநெல்வேலி

**2004.ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர்களின்**

## அனுமதி

மேற்படி குருகுலத்தில் புதிய மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள், பாடவிதானங்கள் என்பனவற்றை கீழ்க்காணும் முகவரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **31.01.2004**

*ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.* (26364)

இணைப்பாளர்
நல்லூர் சிவன்கோயில்
நல்லூர்.
(21-35-13)


## வேலை ஆள்கள் தேவை

பண்ணை வேலைகள் மற்றும் பொருள்கள் ஏற்றி இறக்கல் வேலைகளுக்கு ஆள்கள் தேவை. உணவு, தங்குமிடவசதிகள் உண்டு. நல்ல சம்பளமும், சலுகைப் பணமும் வழங்கப்படும். நேரில் வரவும்.


**க.தனபாலசிங்கன்**
**(வீடியோ சென்ரர் வளவு)**
**19, முருகேசர் லேன்,**
**முத்திரைச்சந்தையடி,**
**நல்லூர்.**

(25-21-13) (26359)


## நீங்காத நினைவலைகள்



அமரர்
**பரமசாமி புஸ்பநாதன்**



திருமதி
**பரம்சாமி இராசலட்சுமி**



அமரர்
**பரமசாமி பரமநாதன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1963-10-08 | ← மண்ணகம் → | 1944-02-01 | ← மண்ணகம் → | 1968-11-06 |
| 1988-02-25 | ← விண்ணகம் → | 2003-01-07 | ← விண்ணகம் → | 1987-11-17 |

*பதினைந்தாண்டாக*
*உனை நினைந்தழுகின்றோம்.*

*எமைவிட்டு ஓராண்டு அகன்றாலும் - உம் நினைவால்*
*எம்இமை மூட மறுக்கிறதே.*

*அமைதிப்படை உனை அழித்தார்*
*அதனால் மனஅமைதி*
*நாமிழந்து வாடுகின்றோம்.*

பாரதி வீதி, கம்பர்மலை. (26369)(34-21-13) **குடும்பத்தினர்.**

உதயன்

## வேண்டாம் இந்த விபரீதம்!

இவ்வாரம் தலைநகர் கொழும்பில் பலரையும் அசசத்துக்கு உட்படுத்தியிருந்த விடயம் அப்படியே மெல்ல அமுங்கிப்போயிருக்கின்றது. எந்த நேரமும் நிலைமை மோசமாகலாம் என்ற அந்தரத்தில் அவதிப்பட்டுக்கொண்டிருந்தவர்கள் பேரனர்த்தம் ஏதும் இன்றி விடயம் அடங்கிப்போனதால் நிம்மதிப்பெருமூச்சு விடுகின்றார்கள்.

பல இனக்கலவரங்களைச் சந்தித்த தலைநகரும் நாடும் ஒரு மதக் கலவரத்தைச் சந்திக்கலாம் என்ற அச்ச சூழ்நிலையே அமைதி விரும்பிகளை அவலத்தில் ஆழ்த்தியிருந்தது.

மறைந்த பௌத்த தேரர் கங்கொடவல சோம தேரரின் இறுதி நிகழ்வுகளையொட்டியே இந்தப் பதற்ற சூழ்நிலை பரவியது.

எனினும் அரசுத்தரப்பும், ஜனாதிபதியின் தரப்பும் ஒருமுகமாகக் காட்டிய சிரத்தை காரணமாக - முன்னேற்பாட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக - நிலைமை விபரீதமாகாமல் சமாளிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும், விவகாரம் நீறுபூத்த நெருப்பாக உள்ளே கனன்றுகொண்டிருப்பதை மறந்துவிட - மறைத்துவிட - முடியாது.

பௌத்த மதம் அதற்குரிய கோட்பாடுகளுடன் - புத்த பகவான் காட்டிய வழியில் - கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதில் அதிக அக்கறையும் தீவிரமும் காட்டியவர் சோம தேரர். பௌத்தர்கள் பிற மதங்களுக்கு மதமாற்றம் செய்யப்படுவதை - அதுவும் சலுகைகளையும், ஆசைகளையும் காட்டி மதமாற்றம் செய்யும் செயற்பாடுகள் ஓர் இயக்கமாகவே மேற்கொள்ளப்படுவதை - கடுமையாக எதிர்த்து வந்தவர் அவர். இதனால், சிங்கள பௌத்தர்கள் மத்தியில் அமோக செல்வாக்கைப் பெற்றிருந்தவர்.

அத்தகைய ஒரு மதவழிகாட்டி - அதுவும் திடகாத்திரமும் நல்லாரோக்கியமும் உடையவர் போல் தோற்றமளித்த மதத்தலைவர் - மேல் நாட்டுக்கு விஜயம் செய்திருந்த சமயத்தில் எதிர்பாராத விதத்தில் அமரத்துவம் அடைந்தமை இயல்பாகவே சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தைத் தோற்றுவித்திருந்தது. திட்டமிட்டு மதம்மாற்றும் இயக்கங்களுக்கு எதிராகக் குரல் எழுப்பும் சக்திகளின் குறியீட்டுச் சின்னமாக விளங்கிய அவரின் திடீர் மறைவுக்கு, மதமாற்றும் தீவிரம் கொண்ட சக்திகள் காரணமோ என்ற சந்தேகம் பரவியமை - அல்லது திட்டமிட்டு பரப்பப்பட்டமை - பதற்றம் ஏற்படக் காரணமாயிற்று.

தமது அரசியல் லாபங்களுக்காக பேரினவாத சிந்தனையைப் பரப்பமுயன்ற நமது அரசியல்வாதிகள், அதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றுதான் பௌத்த மதத்துக்கு அரசமைப்பு மூலம் முன்னுரிமை கொடுக்கும் ஏற்பாடு. 1972 அரசமைப்பு மூலமே இது அறிமுகப்படுத்தப்பட்டது.

அப்படியிருந்தும் நமது நாட்டு மக்கள் அவர்கள் எந்த இனத்தவர்களாக இருந்தாலும் - தமக்குள் இன ரீதியாக மோதிக்கொண்டாலும் கூட மத சார்பின்மையையும் (Secularism), மத சகிப்புத்தன்மையையும் (Religous Tolerance) பொதுவாக அதிகளவில் கடைப்பிடித்து வந்தவர்கள்.

இதனால்தான் நாட்டில் இனப் பூசல்களினால் இனக் கலவரங்கள் பல வெடித்தபோதும் - அத்தகைய கலவரங்களின்போது இனங்கள் சார்ந்த மத வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டோ அல்லது சேதமாக்கப்பட்டோ அனர்த்தங்கள் ஏற்படுத்தப்பட்டபோதும் - மதக் கலவரங்கள் வெடிக்கவில்லை.

ஆனால், மத சமரசம் தொடர்பாக மக்கள் காட்டிய இந்த அதீத பொறுமையை சில மத இயக்கங்கள் தவறாகப் புரிந்துகொண்டு, அதனைத் தமக்கு வாய்ப்பான விவகாரமாகக் கருதி செயற்படத் தொடங்கியுள்ளன. சலுகைகளையும், வெகுமானங்களையும், உதவிகளையும் காட்டி மக்களை மதமாற்றும் பேரியக்கமே இன்று செயற்படத் தொடங்கி, வேர்விட்டுப் பரந்திருப்பது சகிப்புத்தன்மை மிக்க மக்களின் எண்ண ஓட்டத்தை ஓர் எல்லை வரை - விளிம்புவரை - இட்டுச் சென்றிருக்கின்றது.

மதம்மாற விரும்பினால் அந்தச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அதை யாரும் மறுக்கமுடியாது. மறுக்கவும்கூடாது. அதேபோன்று மதப்பிரசாரம் செய்யும் சுதந்திரமும் ஒவ்வொருவருக்கும் உண்டு. அதனையும் மறுக்கக் கூடாது. ஆனால், அந்தச் சுதந்திரத்தை மதமாற்றப் பிரசாரத்துக்குச் சாதகமாகப் பயன்படுத்துவோர் மதப் பிரசார சுதந்திரத்தின் எல்லை எது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

போர் நலிவாலும், பொருளாதாரப் பின்னடைவாலும் கஷ்டப்படும் சமுதாயத்தை சலுகைகளைக் காட்டி - அற்ப, சொற்ப உதவிகளை முன்னிறுத்தி - மதமாற்றத்துக்குத் தூண்டுவது பெரும் இழிசெயலாகவே கருதப்படவேண்டும். மத சுதந்திரத்துக்கும் மதத்தின் பெயரால் மேற்கொள்ளப்படக்கூடிய மேற்படி இழிசெயலுக்கும் இடையில் தெளிவான வரையறைக் கோடு ஒன்றை வரைவதில் சிக்கல் உண்டு.

அந்தச் சிக்கலை மதமாற்றப் பிரசாரக்குழுக்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயலக்கூடாது.

தொடர்ந்து முயன்றால் இன்று அடங்கிப் போய், உள்ளே கனன்று கொண்டிருக்கும் மதக் காழ்ப்புணர்ச்சி என்றோ ஒருநாள் மதக் கலவரமாக வெடிப்பது தவிர்க்க முடியாத யதார்த்தமாகிவிடும்.

இனக்கலவரங்களைத் தாங்கமுடியாமல் தடுமாறும் நமது நாடு, மதக் கலவரங்களைத் தாங்குமா? எண்ணிப் பார்க்கவே நடுங்குகிறது. சம்பந்தப்பட்டோர் நாட்டைப் பிறிதொரு கோணத்தில் இரத்தக் களரிக்குள் உட்பட வைப்பதை விடுத்து தாமாகச் சிந்தித்து திருந்திக்கொள்வது நல்லது.

# ஓய்வூதியக் கொடுப்பனவு நடைமுறை அடுத்தாண்டு முதல் மாற்றப்படும்

## திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.27

அடுத்தாண்டு ஜனவரி மாதம் முதல் ஓய்வூதியக் கொடுப்பனவுச் சிட்டையை அனுப்பிவைக்கும் நடைமுறையில் மாற்றம் ஏற்படவுள்ளது. ஓய்வூதியத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் என்.அபயவிக்கிரம இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இதுவரைகாலமும் மாதந்தோறும் ஓய்வூதியாகளுக்கான ஓய்வூதியச் சிட்டைகள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுவந்தன. அடுத்த ஆண்டிலிருந்து ஒரு வருடத்துக்கான ஓய்வூதியச் சிட்டைகள் ஒரே தடவையில் அனுப்பிவைக்கப்படவுள்ளன. மாதந்தோறும் இவற்றை அனுப்புவதால் ஏற்படுகின்ற செலவீனத்தைக் குறைப்பதற்காகவே புதிய நடைமுறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் தீர்மானமானது பிரதேச செயலாளர்கள் மற்றும் பொது நிர்வாக அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் நடத்திய கலந்துரையாடலில் எடுக்கப்பட்டது.

இதனால், ஓய்வூதியக் கொடுப்பனவுச் சிட்டைகளுக்கு ஓய்வூதியர்கள் மாதந்தோறும் காத்திருக்க வேண்டியதில்லை. வருட ஆரம்பத்தில் அறிவிக்கப்படும் மாதாந்த ஓய்வுதியக் கொடுப்பனவுத் திகதிகளுக்கு அமைய ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஓய்வூதியர்களை இனங்காண்பதில் சிரமங்கள் ஏதும் ஏறபடுமா என்பதை அறிந்துகொள்வதற்காக இந்தப் புதிய நடைமுறை முதல் மூன்று மாதங்களுக்குப் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்படும். இதில் சிரமங்கள் ஏதும் இருப்பின் மீண்டும் பழைய நடைமுறை பின்பற்றப்படும்.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-10)

# நன்னீர் நிலைகளைப் பாதுகாக்க ரூ.10 கோடி செலவில் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.27

குடாநாட்டில் உள்ள நன்னீர் நிலைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் 10 கோடி ரூபா செலவில் அடுத்தாண்டு மேற்கொள்ளப்படவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

மேற்படி சபையின் அலுவலர் ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நன்னீர் நிலைகளைப் பாதுகாக்கும் திட்டம் 'நிகொட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் குடாநாடு மற்றும் வன்னிப் பகுதிகளில் வாழும் மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதற்கான செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

நன்னீர் நிலைகள் அசுத்தமடைதல் மற்றும் உவர்த்தன்மையடைதல் என்பன பற்றி ஆய்வுகள் நடத்தப்படும்.

இத்திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இத்திட்டத்துக்குப் பூரண ஆதரவு வழங்குவதாகவும் இது அவசிய நடவடிக்கைகளில் ஒன்று என்றும் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் அந்தக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையிலேயே தேசிய நீர்வழங்கல் அதிகாரிகள், வடக்குக் கிழக்கு நீர்ப்பாசனம் தொடர்பான உயர் அதிகாரிகள் ஆகியோரின் பங்களிப்புடன் நன்னீர்ப் பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தீவகத்தில் வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், வலிகாமத்தில் சங்கானை, அராலி, வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், மூளாய், பொம்மைவெளி மற்றும் யாழ். மாநகர சபைக் குட்பட்ட பகுதி தென்மராட்சியில் சாவகச்சேரி, வரணி, கொடிகாம், நாவற்குழி, வடமராட்சியில் பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய இடங்களில் உள்ள நன்னீர் நிலைகள் இத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

பூநகரி, ஆனையிறவு, பளை ஆகிய இடங்களிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் இரணைமடுக்குளமும் உள்ளடக்கப்படும்.

எதிர்வரும் காலங்களில் மக்களுக்குக் குடிதண்ணீர் இடையூறின்றிக் கிடைப்பதை உறுதிசெய்வதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

தற்போது குடாநாட்டில் 5 வீதமான மக்களே சிரமமின்றி நன்னீரைப் பெறுகின்றனர். ஏனையோர் ஏதாவது ஒரு விதத்தில் பாதிப்புறுகின்றனர் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஒ-6)

# இரணைதீவு சென்ற மீனவர் இன்னும் குருநகர் திரும்பவில்லை

## அநாதரவான நிலையில் படகு மீட்பு

யாழ்ப்பாணம்,டிசெ.27

மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்ற கடற்றொழிலாளர்கள் கரைதிரும்பவில்லை என்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்தவர்களான பெனடிக் ரஞ்சித்குமார் (வயது 35), எஸ்.ரவி (வயது 45), கிறேசியன் ஜெண்மார்க் (வயது 35) மற்றும் எஸ்.உதயகுமார் (வயது 37) ஆகியோரே காணாமற்போயுள்ளனர். அந்தோனிப்பிள்ளை ஞானசேகரன் என்பவருக்குச் சொந்தமான படகில் கடந்த 22 ஆம் திகதி நண்பகல் குருநகர்க் கரையில் இருந்து இவர்கள் நால்வரும் கடலுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

மறுநாள் காலை கரை திரும்ப வேண்டிய இவர்கள் அன்று பிற்பகல் வரை கரைதிரும்பவில்லை. இதனால், இவர்களைத் தேடி சக கடற்றொழிலாளர்கள் சிலர் கடலுக்குச் சென்றனர்.

காணாமற்போன கடற்றொழிலாளர்கள் சென்ற படகை இரணைதீவுக் கடற்பரப்பில் தேடிச்சென்றவர்கள் கண்டுபிடித்தனர். அந்தப் படகில் எவரும் இருக்கவில்லை. பெறுமதிவாய்ந்த கடற்றொழில் உபகரணங்களும் அந்தப் படகில் இல்லை.

இதனையடுத்து, படகின் உரிமையாளர் இதுதொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

(ஒ-5)

**நாளை**

மார்கழி 13
ஞாயிற்றுக்கிழமை
(28.12.2003)
திதி : பஞ்சமி
மு.ப. 8.22 வரை
நட்சத்திரம்: சதயம்
முன்னிரவு 11.05 வரை.
சுபநேரம்: 9.28 - 10.58
ராகுகாலம்: 4.58 - 6.28
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

பொய்களால் பெற்ற உயர்வு நீண்டகாலம் நிலைத்திருப்பதில்லை.

# நிரந்தர நியமனம் வழங்குமாறு முதியோர் இல்ல ஊழியர் கோரிக்கை

கைதடி,டிசெ.27

கைதடியில் இயங்கும் அரச முதியோர் இல்லத்தில் அமைய அடிப்படையில் கடமையாற்றிவரும் பதினைந்துக்கும் அதிகமான ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுவிடயமாக, மேற்படி ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் யுத்த சூழ்நிலையின் மத்தியிலும் நாம் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகின்றோம். 1990ஆம் ஆண்டு அமைய அடிப்படையில் நியமனம் பெற்ற நாம் பதின்மூன்று வருடங்கள் கடந்தநிலையிலும் தற்காலிக ஊழியர்களாகவே கடமையாற்ற வேண்டியுள்ளது.

பிள்ளைகளினாலும், உறவினர்களாலும் கைவிடப்பட்டு அநாதரவான நிலையில் விடப்பட்டுள்ள முதியோரைப் பராமரிக்கின்றோம் என்ற மனத்திருப்தியில் சேவையைத் தொடரும் நாம், நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டுமெனப் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும், அந்தக் கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

அமைய அடிப்படையில் கடமையாற்றுபவர்களில் பலர், அரச சேவையில் உள்வாங்கப்படுவதற்கான உச்ச வயதெல்லையைக் கடந்துவிட்டனர் என்றும் கூறப்பட்டது. (எ-75)




வரும் நாள்களில்
மீனாவை திரையில் பாருங்கள்

முற்றிலும் கார்ட்டூன் படங்கள் இசை, விசேட ஒலிக் குறிப்புகளுடன்
தமிழ், சிங்கள, ஆங்கில உரையாடல்களுடன்
2 மணித்தியாலங்களைக் கொண்ட வீடியோப் படமாக வழங்கப்படுகிறது.
இதனைப் பெறவிரும்புகின்ற பொது நிறுவனங்கள்,
பாடசாலைகள், முன்பள்ளிகள், சிறுவர் இல்லங்கள்
போன்றவை எம்முடன் தொடர்புகொண்டு
இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

அனுசரணை:
unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி-32201)



# கைதடிவாசி லண்டனில் மர்ம மரணம்!

கைதடிவாசி ஒருவர் லண்டனில் மர்மமான முறையில் மரணமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி தென்கிழக்கைச் சேர்ந்த கந்தையா இராசமோகன் (வயது 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

வேலைக்குச் சென்று வீடு திரும்பிய இவர் படுக்கைக்குச் சென்றார் என்றும் மறுநாள் காலை வெகுநேரமாகியும் அறையைவிட்டு வராததினால் சந்தேகம் கொண்ட நண்பர்கள் அறையைத் திறந்து பார்த்தபோது அவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார் என்றும் - கூறப்பட்டது. இவர் கடந்த 10 வருடங்களாக லண்டனில் வசித்து வந்தவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-75)

## திருவாசக முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றமும் இந்து சமயப் பேரவையும் இணைந்து நடத்தும் திருவாசக முற்றோதல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் கந்தர்மடம் ஸ்ரீ செல்வ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

# போக்குவரத்தில் இடையூறு

கைதடிச் சந்திக்கும் கைதடி வைரவா கோவிலுக்கும் இடையில் மானிப்பாய வீதியோரமாகப் பறிக்கப்பட்டுள்ள பாரிய கருங்கல்லினால் அப்பகுதியில் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இரவு வேளைகளில் இந்த வீதியால் செல்லும், வாகனங்களும் பயணஞ்செய்யும் பொதுமக்களும் இந்தக்கல்லில் மோதுண்டு அனர்த்தங்களைச் சந்திப்பதாகக் கூறப்பட்டது. (எ-75)


SAMACON LTD

தேவை

எமது நிறுவனத்துக்கு லொறிச் சாரதி (Lorry Driver), ஒட்டுநர் (Welder) ஆகியோர் தேவைப்படுகின்றனர். ஏழு நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு: விளம்பர இல.2132,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(26278) (34-21-12-18)

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
நூற்றாண்டு நிறைவு நிகழ்வுகள
1904 - 2004

எமது பாடசாலையின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் எதிர்வரும் 05.02.2004 திகதியில் ஆரம்பமாகவிருப்பதால், பழைய மாணவர்கள் தமது சுய விவரத்தை நேரிலோ, தபால்மூலமோ பாடசாலையில் இயங்கும் பழைய மாணவர் சங்க அலுவலகத்தில் கிடைக்க செய்யும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

24-12-2003 (C32316)(34-12-17-21) - செயலாளர்.

கடைகள் விற்பனை

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் உள்ள மிட்லண்ட் போட்டோக் கொப்பி கடையிலிருந்து தொடராக உள்ள ஆறு கடைகளும் விற்பனைக்குண்டு. தனித்தனியாகவும் விற்பனைசெய்யப்படும். இன்றும் (27.12.2003), நாளையும் (28.12.2003) தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

செவ்வந்தி,
இல. 7, செவ்வந்தி,
நவீன சந்தை, சாவகச்சேரி.
T.P.: 0602212961

(சி-32276) (12-17-30-21)

பாராட்டுகின்றோம்

எமது நிலைய உபதலைவர்

பிரம்மஸ்ரீ சுந்தரராஜேஸ்வரசர்மா

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமைக்காகவும் -
முன்னாள் தலைவரும் பிரபல எழுத்தாளருமாகிய

திரு.வை.குணசேகரம்

அவர்களின் எழுத்துலக சேவைக்காகவும் -
நிலைய அங்கத்தவரின் மகள்

செல்வி கிருஷாந்தினி நற்குணராசன்

அவர்கள் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குத் தகுதிபெற்றமைக்காகவும் -
இவர்கள் மூவரையும் நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றையதினம் எமது நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

வெள்ளெருவைப் பிள்ளையார்
ச.ச.நிலையம்,
கோப்பாய் மத்தி.

(26348) (25-21-12-17)

உ
சிவமயம்

காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில்
ஈழத்துச் சிதம்பரம்

திருவெம்பாவை உற்சவம் - 2003

சிவன் அடியார்களே!

நிகழும் மார்கழித் திங்கள் 29.12.2003 திங்கட்கிழமை மேற்படி உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். 06.01.2004 செவ்வாய்க்கிழமை அதிகாலை 7 மணிக்கு வசந்தமண்டப பூசையும், பஞ்சரதப்பவனியும் 07.01.2004 புதன் கிழமை மாலை 3 மணிக்கு திருவூடலும் நடைபெற்று தீர்த்தோற்சவத்துடன் விழா நிறைவுபெறும்.

விசேட போக்குவரத்துச்சேவை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆதீனகர்த்தாக்கள்:
அ.அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்.

(C/32319)(34-21-12-16)

பண்டிகைக்கால அதிரடி SALE

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

10,11 POWER HOUSE RD, GRAND BAZAAR, JAFFNA



நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள், சல்வார்கமீஸ் வகைகள், சுடிதார் வகைகள், சோக்கோ ரவுசர், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், சேட், Tசேட், கோட் சூட், பட்டுச்சேலைகள் என் பனவற்றின் அதிநவீன புதிய டிசைன்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

குறிப்பு:- ரூபா 3000/=இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஆண், பெண் இருபாலாருக்கும் பொருத்தமான அழகிய Tசேட்ஸ் அன்பளிப்பாக வழங்கப்படும். இச்சலுகை 20.12.2003 – 31.12.2003வரை மட்டுமே!

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

இல.10,11, மின்சார நிலைய வீதி, (மலையன்கபே முன்பாக) பெரியகடை, யாழ்ப்பாணம்.

கலாபூஷணம் திரு. க.ப.சின்னராசா
அவர்களின் மாணவன்
கலாவித்தகர் செல்வன் துரைசிங்கம் சுபேஷ்
(யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவன்)
அவர்களின்

மிருதங்க அரங்கேற்றம்



இடம் : மானிப்பாய் பிரதேச சபை கலாமண்டபம்
காலம் : 28.12.2003 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30
தலைவர் : செஞ்சொற் செல்வர்
திரு.ஆறு.திருமுருகன் அவர்கள்

அணிசெய் கலைஞர்கள்

பாட்டு : யாழ். கலைஞான செம்மல்
திரு.தவநாதன் றொபேட் (இசைமாணி)
(யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்)
வயலின் : இணுவையூர் இசைஞான திலகம்
திரு. உ.இராதாகிருஷ்ணன்
மிருதங்கம் : கலாவித்தகர் து.சுபேஷ்
கஞ்சிரா : கலாவித்தகர்
செல்வன் கிருபா
அனந்தகோபன்
கடம் : கலாவித்தகர்
என். மாதவன்
முகர்சிங் : இசைஞான கலாபமணி
திரு.எஸ். இராசா

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் திரு.ப.கோபாலகிருஷ்ண ஐயர்
(பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்.ப.கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்
பேராசிரியர் திரு.சபா ஜெயராசா
(தலைவர், நடனத்துறை யாழ். ப.கழகம்)
சாகித்திய இசைப் பேரரசு
திரு.நா.வி.மு.நவரெத்தினம் M.Phil (Mus)
(தலைவர், இசைத்துறை, யாழ்.ப.கழகம்)
கௌரவ விருந்தினர் :
இலண்டன் பாரதிய வித்தியாபவன்
இசை விரிவுரையாளர்.
ஸ்ரீமதி சிவசக்தி சிவநேசன்
(முன்னாள் இசைத்துறை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்
இறை வணக்கம்
தலைமை உரை : செஞ்சொற் செல்வர் திரு.ஆறு. திருமுருகன்
வரவேற்புரை : செல்வி கோ.தமிழினி (கலைப்பீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்)
ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)
சிவாகம கிரியா தத்துவநிதி வேதாகம கலாபமணி
பிரம்மஸ்ரீ ச.மு.ரவிக்குருக்கள் (பிரதமகுரு, விசுவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தானம்)
குரு வணக்கம் :
கலைஞர்கள் கௌரவிப்பு :
இசை அரங்கு :
பிரதம விருந்தினர் உரை : பேராசிரியர் திரு.ப.கோபாலகிருஷ்ண ஐயர் (பீடாதிபதி, கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர் உரை : பேராசிரியர் திரு.சபா. ஜெயராசா (தலைவர், நடனத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
சாகித்திய இசைப் பேரரசு நா.வி.மு.நவரெத்தினம் (M.Phil) (தலைவர் இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
கௌரவவிருந்தினர் உரை : ஸ்ரீமதி சிவசக்தி சிவநேசன் (இலண்டன் பாரதிய வித்தியாபவன் இசைத்துறை விரிவுரையாளரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் இசைத்துறை விரிவுரையாளரும்)
வாழ்த்துரை : திரு.சி.எ.மோகன்தாஸ் (பிரதேச செயலாளர், வலிமேற்கு, சங்கானை)
திரு. ச.கைலாசநாதன் (அதிபர் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)
மதிப்பீட்டுரை : சங்கீதரத்தினம் எம். சிதம்பரநாதன் (விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.ப.கழகம்)
நன்றியுரை : செல்வன் து.ரமேஷ்

வீடியோ - முத்தொளி, ஒலி அமைப்பு - விக்ரர்

கலைஞர்கள், கலாவித்தகர்கள், இசைப்பிரியர்கள், இசை ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி துரைசிங்கம் குடும்பத்தினர்.

(C/32267) UTHAYAN Graphics

அருளானந்தா ரெக்ஸ்ரைல்ஸ் பிரதான வீதி, சங்கானை.

# கல்விச்சாலைக் காட்சிகள்



கொக்குவில் மத்திய சனசமூக நிலைய முன்பள்ளியின் இறுதி ஆண்டு மாணவர்களின் கலை நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. அதில் மாணவர்கள் வழங்கிய நடன நிகழ்ச்சியில் ஒரு காட்சி இது. (ஐ)



ஆனைக்கோட்டை உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலைய அடைக்கலநாயகி முன்பள்ளி ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் சிறார்கள் கலந்துகொண்ட ஒரு நடன நிகழ்ச்சி. (ஐ)



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மறை மாவட்ட இயக்குநர் அருட்திரு.மௌலிஸ் அடிகளார் உரையாற்றுவதையும் கிறிஸ்தவ கீதங்கள் இசைக்கும் கல்லூரி மாணவ, மாணவிகளையும் படத்தில் காணலாம்.

*(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)*



பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதனுக்கு கல்லூரி அதிபர் செல்வி பெ.கந்த சாமி விருது ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம். இக்கல்லூரியின் அபிவிருத்திக்கு கல்விப் பணிப்பாளர் வழங்கிய உதவிகளுக்கும், ஒத்துழைப்புக்கும் பாராட்டு தெரிவிக்குமுகமாக இந்த விருது வழங்கப்பட்டது.

*(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

# பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வளவு நிதியா? பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம்

## வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்

சமாதான சூழலில் பாதுகாப்பு அமைச்சுக்கு பெருந்தொகைப் பண ஒதுக்கீடு ஏன்? என்று வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசும், புலிகளும் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பல ஐரோப்பிய நாடுகளின் மேற்பார்வையின் - மத்தியஸ்தத்தின் கீழ் - முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. இவ்வேளையில், ஸ்ரீலங்கா அரசின் 2004ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கென - கடந்த ஆண்டுகளைப் போல் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அரசு மீண்டும் ஒரு யுத்தத்திற்குத் தயாராகிறதா என்ற ஓர் ஐயப்பாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. சமாதானத்தை ஏற்படுத்திப் பாதுகாப்புச் செலவீனங்களைக் குறைத்து, மக்கள் மேல் சுமத்தப்பட்ட வரிச்சுமையைக் குறைப்போம் எனக் கூறிக் கொண்டு ஆட்சிபீடம் ஏறிய அரசு, பாதுகாப்பு அமைச்சுக்கு மீண்டும் அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்திருப்பது தமிழ்மக்களுக்குப் பீதி உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

பல விடயங்களில் முரண்படும் அரசும், எதிர்க்கட்சியும் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிணைந்து செயற்பட்டமை தமிழ் மக்கள் மனதில் மேலும் சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது. அத்துடன், கடந்த காலங்களில் பாதுகாப்புக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, தமிழ் மக்களின் உயிர், உடைமைகளை அழிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனவே, மீண்டும் ஒரு யுத்தத்தைத் தமிழ்மக்கள் மீது திணித்து அவர்களது உயிர்களுக்கும, உடைமைகளுக்கும் அழிவினை ஏற்படுத்தாது அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசும், எதிர்க்கட்சியும் உருவாக்கி, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் என இந்நாட்டு மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி மற்றும் ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளின் தூதரகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## நத்தார் விழா

யாழ்ப்பாணம்,டிசெ.27

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஒளிவிழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் டாக்டர் வை.தியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்திரு சி.ஜி.ஜெயக்குமார் அடிகளாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-10)

## நோன்புப் பெருநாளை முன்னிட்டு

# மக்கள் பணிமனையில் சர்வமத ஒன்றுகூடல்

சர்வமத ஒன்றுகூடல் ஒன்று யாழ். மக்கள் பணிமனையில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பிற்கு மக்கள் பணிமனைத் தலைவரும் யாழ், கிளிநொச்சி ஜம்மியததுல் உலமாத் (இஸ்லாமிய மார்க்க அறிஞர் சபை) தலைவருமான மௌலவி சுபியான் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர். இதில் மௌலவி சுபியான் தமது உரையில் தெரிவித்ததாவது:-

இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும் சமாதான ஐக்கிய வாழ்வை கட்டியெழுப்புவதற்கும் இச்சந்திப்பு உறுதுணையாக அமையவேண்டும்.

இவ்வாறான ஒன்றுகூடல்கள் சகல மத விழாக்களின்போதும் இடம்பெற்றால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

யாழ். மாவட்டத்தில் சர்வமத கூட்டமைப்பை கட்டியெழுப்ப வேண்டும். இம்மத நல்லிணக்க அமைப்பானது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும - என்றார். (எ-4)

# புத்தாண்டில் புதிய பல திட்டங்களை யாழ். கூட. சங்கம் முன்னெடுக்கும்!

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 2004ஆம் ஆண்டில் புதிய தொழில திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்கத்தலைவர் சு.சிறில் தெரிவித்தார்.

புதிதாக மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்களை ஜனவரிமுதல் படிப்படியாக நடைமுறைப்படுத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. சங்கத்தின் எல்லைப் பரப்பில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் இந்தப் பாரிய வேலைத் திட்டங்களால் பாவனையாளர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்று சங்க நிர்வாகம் எதிர்பார்க்கின்றது.

புதிய ஆண்டில் பின்வரும் சேவைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

- ★ வலைய ரீதியான நவீன சந்தைகள்.
- ★ கட்டடப்பொருள் விற்பனை நிலையம்.
- ★ அரிசி ஆலை
- ★ புடைவை நிலையம்
- ★ மருத்துவ சேவை நிலையம்
- ★ வாகனசுத்திகரிப்பு நிலையம்
- ★ நவீன வெதுப்பகம்
- ★ நவீன சுயசேவையகம்
- ★ கணனிமய பதிப்பகம்
- ★ நவீன முறையிலான எரிபொருள் விற்பனை நிலையம்
- ★ உணவகம் (ஐ-17)

# வவுனியா தபால் நிலையத்தில் 2 ஆயிரம் பொதிகள் தேக்கம்!

## புலிகளின் பகுதிக்கு அனுப்புவதில் சிக்கல்

வவுனியா,டிசெ.27

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கு அனுப்பப்படவேண்டிய சுமார் 2 ஆயிரம் தபால் பொதிகள் வவுனியா தபால் நிலையத்தில் தேங்கியுள்ளன.

வவுனியா தபால் நிலையத்திலிருந்து திணைக்கள வாகனங்களில் வன்னிப்பகுதிக்குத், தபால்களும், தபாற் பொதிகளும் எடுத்துச்செல்லப்படுகின்றன. சாதாரண தபால்களையே வன்னிப பகுதிக்குக் கொண்டுசெல்ல தமிழீழ நிர்வாக சேவையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

தபால் பொதிகள் மூலம் இலத்திரனியல் சாதனங்கள் உட்பட விலையுயர்ந்த பொருள்கள் வியாபார நோக்கத்துடன் வன்னிப் பகுதிக்கு அனுப்பப்படுகின்றன என்றும் -

அத்தகைய பொதிகளை அனுமதிக்க முடியாது என்றும் - தமிழீழ நிர்வாக சேவையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நிர்வாக சேவையினருக்கும், வவுனியா தபால் நிலைய அதிகாரிகளுக்கும் இடையே பேச்சு இடம்பெற்றது. சர்ச்சைக்குரிய பொதிகளைத் தவிர்த்து, சாதாரண பொருள்கள் அடங்கிய பொதிகளை வன்னிப்பகுதிக்கு எடுத்துச்சென்று உரியவர்களிடம் சேர்ப்பிப்பதென்று இந்தப் பேச்சில் முடிவுசெய்யப்பட்டது.

ஆனால், இதனை நடைமுறைப் படுத்துவதில் வவுனியா தபால் நிலைய அதிகாரிகள் சிக்கலை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

தபாலில் சேர்க்கப்படும் ஒரு பொதியை பிரித்துப்பார்ப்பதற்கு தபால் சேவையினருக்கு அதிகாரம் இல்லை என்றும் - ஒரு தபாலையோ அல்லது தபால்பொதியையோ குறிப்பிடப்பட்ட முகவரியில் சேர்ப்பிப்பது தமது கடமை என்றும் -

அவ்வாறு சேர்ப்பிக்க முடியாவிட்டால் அவற்றை அனுப்பிய நபருக்கே திருப்பி அனுப்ப வேண்டிய நிலையிலேயே தாம் உள்ளனர் என்றும் - தபால் திணைக்களத்தினர் கூறுகின்றனர்.

இதனால், தபால் பொதிகளைப் பிரித்து அவற்றில் உள்ளவற்றின் அடிப்படையில் தரம் பிரிக்கும் செயலில் தபால் ஊழியர்கள் ஈடுபட முடியாதுள்ளனர். ஆகவேதான் சுமார் 2 ஆயிரம் தபால் பொதிகள் வவுனியா தபால் நிலையத்தில் தேங்கியுள்ளன.

இந்தப் பிரச்சினை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, தபால் திணைக்களம், மக்கள் தொடர்பாடல் அமைச்சு ஆகியவற்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (ஒ-164)

# கிராமப்புறப் பாடசாலைகள் பலவும் மூடப்படும் அபாயம்!

கொழும்பு,டிசெ.27

நாடளாவிய ரீதியில் கிராமப்புறப் பாடசாலைகள் பலவும் மூடப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்று கல்வி அமைச்சு தெரிவித்திருக்கிறது.

கிராமங்களில் இருந்து நகர்ப் பகுதிகளுக்கு அதிக எண்ணிக்கையிலான மக்கள் குடிபெயர்வதும் பிரபல பாடசாலைகளில் மாணவர்களைச சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் பெற்றோர்கள் மத்தியில் அதிகரித்து வருவதுமே இதற்கான பிரதான காரணங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி 10 ஆயிரத்து 283 பாடசாலைகள் நாட்டில் செயற்பட்டுவந்தன.

ஆனால், கடந்த வருடம் இந்த எண்ணிக்கை 9ஆயிரத்து 229 பாடசாலைகளாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இத்தகைய வீழ்ச்சிப் போக்கைக கட்டுப்படுத்துவதற்கு, எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-4)

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

1. பிரதான உணவகம், திருநெல்வேலி.
2. பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம்.
3. இராமநாதன் நுண்கலைக்கழக பெண்கள் விடுதி உணவகம்.
4. இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம்.
5. சித்த மருத்துவத்துறை உணவகம்.

ஆகிய உணவகங்களை நடத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளரினால் 2004.01.09 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் தனித்தனியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 1000/- வும், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 200/- வும் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப்படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரு விண்ணப்பப்படிவம் ஓர் உணவகத்திற்கு விண்ணப்பிப்பதற்கே உபயோகிக்கலாம். விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர். (சி-32271) (25-13) 22.12.2003

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 07 |
| 08 | 01 |
| 1945 | 2003 |



### அமரர் கந்தர் இராசகுணம்

(மினிபஸ் சாரதி)

ஆண்டொன்றாகி விட்டாலும் எங்கள் மனதில்
உங்கள் நினைவு நீங்காது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி பெற காளிஅம்பாளை வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

பிரிவால் துயருறும்: மனைவி பிள்ளைகள், மருமக்கள், சகோதரர், பேரப்பிள்ளைகள்.

(26192)(34-13-25)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 20 | 27 |
| 02 | 12 |
| 1926 | 2002 |



### அமரர் புலோலியூர் வேலுப்பிள்ளை ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற கணக்குப்பரிசோதகர்)

அன்பையும் அறிவையும் எமக்கீந்த
அன்புத் தெய்வமே ஐயா!
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்.

நிரந்தர முகவரி:
'பூற்பதி'
புலோலி தெற்கு,
புலோலி.

தற்போதைய முகவரி:
காட்டுப்புலம்,
தொண்டைமானாறு.

(26325) (25-13)

- குடும்பத்தினர்.

## விசர்நாய்க் கடிக்கு கிளிநொச்சியில் மருந்தில்லை

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் விசர்நாய்க் கடிக்கான மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விசர்நாய்க் கடிக்கான மருந்து ('ஏ.ரி.எஸ்.') மற்றும் நாய் கடித்த காயத்தில் கிருமிகளைக் கட்டுப்படுத்தும் மருந்து ('ஏ.ஆர்.எஸ்.') ஆகிய இரு வகை மருந்துகளும் முற்றாக இல்லை.

இதனால் விசர்நாய்க் கடிக்கு இலக்காவோர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அல்லது வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு செல்லவேண்டி உள்ளது. (ஒ-4)

## புலமைப்பரிசில் அனுமதிக் கடிதம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.27

ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் வருடாந்தப் புலமைப்பரிசில் திட்டத்தில் வெற்றியீட்டியவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வர்த்தக வங்கியின் முகாமையாளர் எஸ்.ரவீந்திராவும், சிறப்புவிருந்தினராக வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலமும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-10)

## அடகுப் பிரச்சினையால் ஒருவருக்குக் கத்திக்குத்து!

யாழ்ப்பாணம்,டிசெ.27

அடகுநகை விவகாரத்தினால் கத்திக்குத்துக்கு இலக்கான நபர் தலையில் படுகாயமடைந்தார்.

கைதடிநாவற்குழி தெற்கைச் சேர்ந்த தம்பு கருணாலிங்கம் (வயது 37) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்கானவராவார். இச்சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-10-15)

### தேவை

இலத்திரனியல், அழகுசாதன (Fancy) விற்பனையில் அனுபவமுள்ள பெண் /ஆண் விற்பனையாளர்கள் தேவை. கணனி அறிவு விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

ஸ்ரீவிநாயகர்,
வழக்கம்பரை, சுழிபுரம்.

### ரியூஷன் மாஸ்ரர் தேவை

ஆண்டு 10 படிக்கும் மாணவ மாணவிக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க மாஸ்ரர் தேவை. A/L படிக்கும் மாணவராயினும் விரும்பப்படுவர். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:
ம.தேவகுமாரன்,
வட்டுகிழக்கு,
வட்டுக்கோட்டை.
(34-13-25) (26306)

### கோவில் திரைச்சீலை விற்பனைக்குண்டு

கொம்பியூட்டர் பிறின்டில் (4'x6') கருமாரி அம்மன், காமாட்சி அம்மன், பிள்ளையார், முருகன் படங்கள்.

றூபன்,
கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார்கோவிலடி. (26333)
(34-13-25)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்தவல்லவர்:

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By: Royal Industries, Colombo. ☎ 0112334603




ஏக விநியோகத்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567
சத்திரத்துச் சந்திக்கு அருகில்


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர், யுவதிகளினது திறமைகளைக் கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற புதிய நிர்மாணிப்பு நடனத்தை நெறிப்படுத்திய எமது ஆசிரியர்

உயர்திரு.

### கே.எஸ்.பாஸ்கரன்

அவர்கள் (29.12.2003) திங்கட்கிழமை மகரகமவிற்கு விருதுபெறச் செல்வதனையிட்டு எமது ஆசிரியரைப் பாராட்டி அவர் மேலும் பல விருதுகள் பெற வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள்:
S.S.தயா (N.W.SLDB),
S.ஜீவா.

சுன்னாகம். (26332)(34-25-13)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1914 | 1998 |
| 03 | 01 |
| 21 | 03 |



### அமரர் சின்னையா சிவக்கொழுந்து

திதி: 27.12.2003

நொந்து சுமைதாங்கி நோகாமல் எமை வளர்த்த
தெய்வமே!
எங்கிருந்து சொந்தங்கள் செல்வங்கள்
எவைவரினும்
தங்கியுந்தன் மடியிருந்து அரவணைத்த சுகம்
வருமா?
ஐந்தாண்டுகள் என்ன ஐம்பது ஆண்டுகள்
சென்றாலும்
உம் நினைவு என்றும் எம் நெஞ்சில்.

என்றும் உம் நினைவில்:
- குடும்பத்தினர்.

(26281) (25-13)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1922 | 2001 |
| 05 | 12 |
| 06 | 19 |



### அமரர் சின்னவி குட்டித்தம்பி

திதி: 27-12-2003

ஆண்டிரண்டு ஆனபோதும்
ஆறுமோ எம் துயரம்?
ஏங்குதையா உம் மறைவை எண்ணி
எங்கள் இதயம்!

அம்மன் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(26288) (26-13-25)

# தென்பகுதி அரசியல் சிக்கல்கள் தனிநாட்டுக்கு வழிவகுக்குமா?

**தென்பகுதியில் நிலவும் அரசியல் சிக்கல்கள் காரணமாக சமாதானப் பேச்சுக்கள் இடைநடுவில் நிற்கின்றன. சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், சமாதானப் பேச்சுக்களைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டால் அது தனிநாட்டுக்கு வழி வகுப்பதாகவும் அமையக்கூடும் என்கிறார் கட்டுரையாளர் ரஞ்சித் ஆனந்த ஜயசிங்கா. 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஜனநாயக அரசியல் என்பது ஒரு கலை என்பதோடு அது ஒரு விஞ்ஞானமும் போன்றதென முன்னர் ஒரு தடவை மகாத்மாகாந்தி கூறியுள்ளார். ஒரு கலை தொடர்பான அறிவுத்தேடல் போன்றே விஞ்ஞானபூர்வ, தர்க்கரீதியான யதார்த்தமும் அரசியலுக்குத் தேவையான இலட்சணமென்பது இதன் மூலம் புலனாகிறது.

ஆனால், இன்றைய நம்நாட்டு அரசியல் செயற்பாடுகளில் கலைத்தன்மையையோ அல்லது விஞ்ஞானபூர்வ விளக்கத்தையோ காணமுடியவில்லை. அதற்குப் பதிலாக விரோதப்போக்கு, சந்தேகம், கொலை முயற்சி மற்றும் எதிர்த்தரப்பைப் பொறியில் சிக்கவைக்கும் முயற்சி ஆகிய நடவடிக்கைகளையே காணமுடிகிறது. நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகள் யாவும் தத்தமது தரப்புக்களின் லாபம் கருதி வேறுபட்ட அளவில் இவ்வித செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

தமது இத்தகைய நடவடிக்கைகளை அரசியல் தந்திரம் என்ற விதத்தில் அவர்கள் நியாயப்படுத்த முனைகின்றனர். இவர்களது இத்தகைய நடவடிக்கைகளால் நாடு இன்று தலைதூக்கமுடியாத அளவுக்கு நலிவடைந்துள்ளது. இது குறித்து எதுவும் செய்யமுடியாத நிலை அரசியல்வாதிகளால் நடித்துக் காண்பிக்கப்படும். இந்நாடகத்தின் பார்வையாளர்களாக இருக்கவேண்டிய நிலை பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இன்று இந்நாட்டு அரசியலில் இடம்பெறுவதென்ன? நாளை என்ன நடைபெறும்? என்பது பற்றி எம்மில் எவராலும் எதிர்வுகூற முடியாதுள்ளது. இன்றைய நம்நாட்டின் அரசியலில் அவ்வித நிச்சயமற்ற தன்மையே நிலவுகின்றது. இதுவுமில்லை அதுவுமில்லை எனக் கூறுவது போல கட்சிகளின் உள்ளும் சிக்கல், வெளியிலும் சிக்கல் என்ற நிலையே இன்றைய அரசியலில் காணப்படுகின்றது.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 5 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பொதுமக்கள் பெரும்பான்மைப் பலத்துடன் ரணிலைப் பதவியில் அமர்த்தினர். அதற்கு நான்கு மாதங்களின் பின்னர் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலிலும் ஐ.தே. கட்சியை வெற்றிபெறச் செய்ததன் மூலம் முன்னைய வெற்றியைப் பொதுமக்கள் மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தினர். அதன்மூலம் நாட்டின் பெரும்பான்மைப் பொதுமக்களின் ஆணையை ரணிலின் அரசு பெற்றுக்கொண்டது. நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தை 38 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றிக்கொள்ள ரணிலின் அரசால் முடிந்தது. அதன்படி அரசை நிர்வகிப்பது தொடர்பாகவோ, அரசின் ஸ்திரத்தன்மை தொடர்பாகவோ பிரச்சினை எதுவும் உள்ளதாகக் கூற முடியாது.

இடைப்பட்ட இரண்டாண்டு காலத்துள் நாட்டின் முக்கிய பிரச்சினையான யுத்தத்துக்கு முடிவுகாணும் முயற்சியாக, பல சிரமங்களுக்கு மத்தியிலும் போர்நிறுத்தத்தை அமுலுக்குக் கொண்டுவந்த அரசு, சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றதன்மூலம் ஓரளவு பொருளாதார அபிவிருத்தியையும் உருவாக்கியது. அதன் மூலம் ஐ.தே. முன்னணி அரசு நாட்டில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தை உருவாக்கியுள்ளது.

ரணில் பிரதமராவதற்கு முன்னர் சந்திரிகா நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பினும் இரண்டாவது தடவையாகவும் பொதுமக்கள் வழங்கிய ஆணை மூலமே அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்க முடிந்தது. அவரது உத்தியோகபூர்வ சேவைக்காலம் முடிவடைய இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன. ஐ.தே. கட்சி உருவாக்கிய நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிப் பதவி மூலம் தற்போது சகல அதிகாரங்களையும் ஜனாதிபதி சந்திரிகா தன்வசம் கொண்டுள்ளார். ஆனால், நாட்டின் வரலாற்றில் முதற்தடவையாக நாடாளுமன்ற அதிகாரம் ஒரு கட்சியிடமும் நிறைவேற்று அதிகாரம் மற்றொரு கட்சியிடமும் சிக்கிக்கொண்டுள்ளது. இவ்விரு தரப்பினரும் புதிய சம்பிரதாயமொன்றைக் கடைப்பிடித்துச் செயற்பட்டாக வேண்டியுள்ளது. சட்டம், அரசமைப்பு மற்றும் சட்டவிதிகள் என்பவற்றுக்கமையச் செயற்படுவதன்மூலம் இந்த அரசியல் சிக்கலுக்குத் தீர்வுகாண இயலாது.

ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்களைக் கைக்கொள்வாரானால் அரசு தனது நாடாளுமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்த இயலும். நீ கத்தியைக் கையில் எடுத்தால் நான் தடியைக் கையிலெடுப்பேன் என்ற வகையில் செயற்பட ஆரம்பித்தால் இவ்விரு தரப்பினரதும் அதிகாரப் போட்டியைப் பார்த்துக்கொண்டிருப்பதைவிடப் பொதுமக்களால் வேறேதும் செய்ய இயலாது. ஆனால, இவ்வித அதிகாரப் போட்டியால் நாட்டின் பொருளாதாரமும் சமாதானமும் நாசமடையப் போவதென்னவோ நிச்சயமானதாகும்.

ஜனாதிபதியால் மூன்று அமைச்சுக்களின் பொறுப்புகள் மீளப் பெறப்பட்டமையை அடுத்து, பிரதமரைப் போன்று ஜனாதிபதியும் மிக அவதானத்துடன் தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தோன்றுகிறது. இதில், பிரதமர் அமைதியான முறையில் ஜனாதிபதியுடன் சிக்கல்கள் குறித்துப் பேச்சு மேற்கொள்ள முன்வந்தமையை விசேடமாகக் குறிப்பிடமுடியும்.

அதுமட்டுமன்றி, அமைச்சுக்களின் பொறுப்பை ஜனாதிபதி கையேற்ற சம்பவத்தால் கொதிப்படைந்த ஐ.தே. கட்சியினரை அமைதிப்படுத்தி, நாட்டில் குழப்பம் ஏற்படாது பார்த்துக்கொள்ளும் பொறுப்பையேற்றுச் செயற்பட்ட சிறந்த அரசியல்வாதியாகவும் பிரதமரைக் கருதமுடிகிறது. இதற்கும் மேலாக, ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச்சுக்களுக்குமான நிதி ஒதுக்கீடு நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டசமயம் அதனை நிறைவேற்றுவதற்குப் பிரதமர் ஆதரவளித்தார். ஆயினும், இவை யாவற்றையும் அரசியல் ஆதாயம் தேடும் உபாயமாகக் கருதியே பிரதமர் இவ்விதம் செயற்பட்டிருக்கலாம். இருந்தபோதிலும், பிரதமரின் இச்செயற்பாடுகள் சிறந்த அரசியல் நாகரிகத்துக்கானதொரு உதாரணமாகும்.

இருந்தபோதிலும், இப்பிரச்சினையில் சமாதான நடவடிக்கைகளைத் தாம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டுமானால் பாதுகாப்பு அமைச்சை நிர்வகிக்கும் பொறுப்பு தமது அரசின் வசம் இருந்தாக வேண்டுமென்பதே பிரதமரின் நிலைப்பாடாகும். அவ்விதமல்லாதவிடத்து, சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பொறுப்பை ஜனாதிபதியே ஏற்றுச் செயற்படுமாறும், அம்முயற்சிகளுக்குத் தாம் ஒத்துழைப்பு வழங்க முடியுமெனவும் பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார். ஆயினும், இவ்விடயத்தில் இருதரப்பினரும் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்படும் நோக்கில் உருவாக்கப்பட்ட மலிக் சமரவிக்கிரம - மனோ தித்தவெல குழுவினரின் பேச்சு ஆரம்பிக்கப்பட்டமையையடுத்து இப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிடுமெனப் பொதுமக்கள் நம்பினர். விசேடமாக முதலீட்டாளர்கள், வெளிநாட்டு ராஜதந்திரிகள், வர்த்தக சமூகத்தினர் என்போர் போன்றே, சமாதானத்தில் நாட்டங்கொண்ட பெரும்பான்மைச் சமூகமும் மனோ - மலிக் குழுவினரின் பேச்சுக்களில் தீர்வு எட்டப்படுமென நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆனால், மனோ - மலிக் குழுவினரிடையே ஆறு, ஏழு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்ற போதிலும் பிரச்சினை முடிவுக்கு வரவில்லை. ஆயினும், தாம் கையேற்ற மூன்று அமைச்சுக்களிலும் எந்தவகையிலும் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை மீண்டும் அரசுக்கு வழங்கமுடியாதென்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக இருந்துவருகின்றார். அத்தோடு, பேச்சுக்கள் வெற்றியளிக்க வேண்டுமானால் இப்பேச்சுக்கள் தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளின் அனுமதியும் பெறப்படவேண்டுமென ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார். அதன் பின்னர் ஊடகங்கள் மீதான கட்டுப்பாட்டை நீக்குதல், அவற்றுக்கு அடிப்படை வசதிகள் செய்துகொடுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய புதிய கொள்கை அறிக்கையொன்றினை பேச்சுக் குழு முன் சமர்ப்பித்தார். அதன் தொடர்

**வியெஸ்ரீ**

சியாகப் பாதுகாப்பு அமைச்சுப் பதவி தொடர்பாகவும் புதிய யோசனையொன்றை முன்வைத்தார். இதனிடையே ஜே.வி.பியினருடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைச் செய்துகொண்டு எதிர்காலத்தில் இவ்விரு கட்சிகளும் ஒன்றிணைந்து அரசியல் நடவடிக்கையை மேற்கொள்வதெனவும் தீர்மானித்தார். நாட்டில் இடம்பெறும் யுத்தம் காரணமாக அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு தீர்வொன்று எட்டப்படவேண்டுமெனக் கருதும் ஜனாதிபதி, அதிகாரப் பகிர்வை முற்றுமுழுதாக எதிர்த்துவரும் ஜே.வி.பியுடன இணைந்து செயற்படவிழைவது இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியதொரு விடயமாகும்.

இதனிடையே பிரதமருடன் சுமுகமான முறையில் பேச்சுக்களை மேற்கொண்டு வந்த மனோ - மலிக் குழுவூடாக பல்வேறு யோசனைகளை முன்வைத்தார். இவற்றில் பெரும்பாலான விடயங்கள் ஒன்றுடன் ஒன்று பரஸ்பரதொடர்புடையவையான விடயங்களாகும்.

கடைசியாக ஜனாதிபதி மற்றுமொரு அரசியல் துரும்பை பிரயோகித்திருப்பதாக ஜனாதிபதியின் அண்மைய கருத்து வெளிப்பாடுகள் மூலம் ஊகிக்கமுடிகிறது. அண்மையில் தன்னிடம் கையளிக்கப்பட்ட 'மிலேனியம் சிற்றி' என்னும் இராணுவத்தினரின் விடுதி சுற்றிவளைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மூலம், பிரதமர் உட்பட்ட அவ்வேளையில் நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்புவாய்ந்த சிலரும் சம்பவத்துக்குப் பொறுப்பேற்க வேண்டுமெனத் தொடர்ச்சியாகக் கருத்து வெளியிட்டு வருவதே இந்த அரசியல் துருப்பாகும். ஜனாதிபதி காரியாலயத்தால் இவ்விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து பிரபல பத்திரிகையொன்றுக்குக் கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச, அரசுக்கு எதிரான கருத்தை வெளியிட்டார்.

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் 'ரெலிகொம்' நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபாலவை கைது செய்ய முடியுமாயின், 'மிலேனியம் சிற்றி' இராணுவ விடுதி சுற்றிவளைக்கப்பட்ட விடயத்தில் பிரதமர் ரணிலும் கைதுசெய்யப்பட வேண்டுமென விமல் வீரவன்ச கருத்துத் தெரிவித்திருந்தார். விமல் வீரவன்சவின் அரசியல் மதிப்பீட்டின்படி திலங்க சுமதிபாலாவும் பிரதமர் ரணிலும் சமமானவர்களாகக் கருதப்படல் வேண்டுமெனத் தெரிகிறது. அது அவருடைய அரசியல் நிலை தொடர்பான மதிப்பீடாகும்.

எவ்விதமோ ஜனாதிபதி மாளிகையிலிருந்து 'மிலேனியம் சிற்றி' சம்பவம் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கைக்கும் பொ.ஐ.முன்னணிக்கும் நெருக்கமான, ஜே.வி.பி. போன்ற ஏனைய அரசியல் கட்சிகளால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கும் பலத்த ஒற்றுமை இருக்கக்கூடும். அது தவறானதென நாம் கூறாவிட்டாலும், ஜனநாயக அரசியல் நடவடிக்கைகள் முற்றுமுழுதாகக் கருத்துச் சிக்கல்களாக அமைந்துவிட்டமையால் எந்தவொரு செயற்பாடு தொடர்பாகவும் சாதக, பாதகமான கருத்தை ஏற்றுக்கொள்ளச் சகலரும் தயாராயிருத்தல் வேண்டும்.

ஆனால், தற்போது எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை இதுவே. ஒருபுறம் சுமுகமான உறவைப் பேணிக்கொள்ள ஆர்வம் காட்டும் அதேவேளை, மறுபுறத்தில் இறுக்கமான விரோதப் போக்கைக் கடைப்பிடிக்க முயலும் தன்மையால் சுமுகமான உறவை எவ்விதம் பேணிக்கொள்ள இயலும் என்பதே அப்பிரச்சினையாகும். காலையில் பிரதமரைச் சந்தித்து அவருடன் பேச்சுக்களை மேற்கொள்ளும் ஜனாதிபதி, அதேதினம் மாலையில் அன்று காலை தன்னுடன் பேச்சு மேற்கொண்ட பிரதமரை விமர்சித்துக் கருத்து வெளியிட்டு வருகிறார். இதன்மூலம் உண்மையில் அரசுடன் சுமுகமான உறவைப் பேணுவதற்கு ஜனாதிபதி விசுவாசமாக விரும்புகிறாரா? எனச் சந்தேகம் எழுகிறது.

ஜனாதிபதியால் மீளப்பெறப்பட்ட மூன்று அமைச்சுக்களின் அதிகாரங்களிலும், பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்களை மீண்டும் அரசிடம் ஒப்படைக்க ஜனாதிபதி தயாராக இல்லையாயின், அதுதொடர்பாக மேற்கொள்ளவேண்டிய மாற்று வழிமுறைகள் குறித்து தீமானிக்க வேண்டிய பொறுப்பு தற்போது ஐ.தே. கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் மற்றொரு நடவடிக்கை குறித்தும் கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. அதாவது, பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரிகளுக்குச் சேவை நீடிப்பு வழங்கி முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியாகுமாவென ஆலோசனை வழங்குமாறு ஜனாதிபதி, உயர்நீதிமன்றத்திடம் கேட்டிருந்தார். இதுபற்றி ஆராய்ந்த உயர்நீதிமன்றம் மேற்படி பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பு ஜனாதிபதி வசமே இருக்கவேண்டுமெனத் தெரிவித்திருப்பதாக ஜனாதிபதி மாளிகையிலிருந்து செய்தி வெளியிடப்பட்டது. ஆனால், இது தொடர்பான உயர் நீதிமன்றத்தின் முடிவு தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அம்முடிவில் எந்த ஓர் இடத்திலும் அவ்விதம் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கள் ஜனாபதிபதியினாலேயே கையாளப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ஜனாதிபதி தரப்பின் இவ்வாதம் வலுவற்றதாகிவிடுகிறது.

இந்தவிதமாக, நாளுக்கு நாள் ஜனாதிபதி புதுப்புதுக் கருத்துகளை முன்வைத்து வருகின்றார். இதற்குப் பதிலாக அரசும் தனது தரப்பு வாதத்தை முன்வைத்து வருகின்றது. இதனை நடுநிலையாக நோக்கும்போது இரு தரப்பினரும் இப்பிரச்சினையை இவ்விதமே இழுத்தடித்துக் காலத்தை ஓட்ட முயல்வதாகத் தோன்றுகிறது. இதனால், அரசியல்வாதிகள் எவரும் சிரமப்படப் போவதில்லை. உண்மையில் இதனால் நாட்டின் பொதுமக்களே சிரமம் அடைய நேரிட்டுள்ளது. இது அரசியல்வாதிகள், இந்நாட்டுப் பொதுமக்களை அவமதிப்பதாக அமைகிறது; பொதுமக்கள் குறித்து கருணை காட்டாத தன்மையாக அமைகின்றது.

இந்திய நாட்டின் தத்துவமேதையெனக் கருதப்பட்ட முன்னாள் இந்திய ஜனாதிபதி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் இவ்வாறான நிலைமையைப் "புது[illegible]யான அழக மனிதனின் ஆத்ம கௌரவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தி அதனை நாசமடையச் செய்கிறது" என ஒரு சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார். "படிப்படியாக மனிதன் திரவநிலைப் பொருளாக மாற்றமடைகிறான்" என அன்று பேராசிரியர் ராதாகிருஷ்ணன் விவரித்த யதார்த்தம், இன்று நம்நாட்டின் அரசியலரங்கில் இடம்பெற்று வரும் நிகழ்வுகளுக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது. இன்று நம் நாட்டுமக்கள் வெறும் வாக்காளர் தொகையாகவே அரசியல்வாதிகளால் கணிக்கப்படுகின்றனர். இந்நாடு 'பாகிஸ்தான்' போன்று அமையாதது இந்நாட்டு அரசியல்வாதிகளின் அதிர்ஷ்டமே.

எவ்வாறானபோதும், ஜனாதிபதியால் மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்கள் மீளப்பெறப்பட்ட சம்பவத்தால் உருவான சிக்கலைச் சுமுகநிலைக்கு மாற்றும் முயற்சியாக நியமிக்கப்பட்ட மனோ - மலிக் குழுவினரின் பேச்சு, கடந்த 15ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துள்ளது. மனோ தித்தவல்ல தற்போது நீண்ட விடுமுறையில் வெளிநாடு செல்லவுள்ளதாக ஜனாபதிபதிக்குத் தெரிவித்துள்ளார். மனோ - மலிக் குழுவின் பேச்சுக்கள் வெற்றியளிக்காததையடுத்து மேற்கொண்டு என்ன நடைபெறப்போகிறது?

இதுகுறித்துக் கருத்து வெளியிடும் சிலர் நாம் பொதுத்தேர்தலொன்றைச் சந்தித்தாகவேண்டுமெனக் கூறுகின்றனர். வேறு சிலரோ ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும்வரை தற்போதைய நிலையிலேயே அரசை நடத்திச் செல்லவேண்டுமெனக் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இதனிடையே இது பிரபாகரனுக்கு வாய்ப்பான வசந்தகாலமாகக் கொள்ள வேண்டியுள்ளது. தென்பகுதியில் உருவாகியுள்ள இச்சிக்கல் அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கும். இந்நிலை குறித்து ஆழமாகப் பரிசீலனை செய்துள்ள அவர், நடைமுறை அரசமைப்பு முறைகாரணமாக மக்களது ஆணையைப் பெற்றுப் பதவிக்கு வந்த அரசொன்றால் தமது பதவிக்காலம் முடிவடையும் வரை எவ்வித சிரமமுமின்றி ஆட்சியைத் தொடர முடியாவிட்டால், இதே அரசமைப்பின் கீழ் தமக்கு வழங்கப்படக் கூடிய இடைக்கால நிர்வாகம் தொடர்பாக நம்பிக்கை கொள்ளமுடியாதெனக் கருத்து வெளியிட்டுள்ளார். ஆதலால், அரசமைப்புக்குப் புறம்பான வகையில் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படுவது அவசியம் என்பதே அவரது வாதமாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு கோரிவரும் இடைக்கால நிர்வாகம் அரசமைப்பு விதிகளுக்கமைவாக மட்டுமே வழங்கப்படுமென இதுவரையில் அரசு கூறிவந்துள்ளது. ஜனாதிபதி அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்ற சம்பவத்தால் தற்போது இந்தவிதமான இலாபத்தைப் பிரபாகரன் அடையமுடிகிறது. அத்தோடு, இடையில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுக்கும் முயற்சியை மேற்கொள்ளும்பொருட்டு எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இங்கு வருவதற்குத் திட்டமிட்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் வருகையும் தற்போது பிற்போடப்படும் நிலையில் உள்ளது. பாதுகாப்பு அமைச்சு தற்போது ஜனாதிபதியின் பொறுப்பில் இருப்பதால், கொழும்பு ஊடாக வன்னிக்குப் பயணம் மேற்கொள்வது பாதுகாப்பற்றது என விடுதலைப் புலிகள் அமைப்பு கருதுவதாகத் தெரிய வந்துள்ளது. இச்சகல காரணங்களாலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் பேரம் பேசும் தன்மை மேன்மேலும் உயர்வடைகின்றது. தற்போது மனோ - மலிக் குழுவின் பேச்சுக்களும் தோல்வியில் முடிவடைந்துள்ளன. அதே சமயம் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையேயான அதிகாரப் போட்டியும் முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. தற்போது 2004ஆம் ஆண்டு நெருங்கி வருகிறது. இதுவரை மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பயனற்றுப்போய் எதிர்காலம் மட்டுமே மிஞ்சியுள்ளது. சமாதானத்துக்கான தேடல்களை ஆரம்பத்திலிருந்தே தொடங்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

*

பல்வகை பழங்களினால், அவற்றின் தரச் சுவைக்கேற்ப

தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசத்தை இன்றே சுவைத்து மகிழுங்கள்.




அதிக பழங்கள் அதிக கோப்பைகள்

Grey Worldwide

# அசாதாரண சூழலில் வேகமாகப் பரவும் 'எய்ட்ஸ்'

எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு தமிழீழ சுகாதார சேவையினர் விடுத்த செய்திக் குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.

குடாநாட்டில் இன்று ஒரு வித்தியாசமான சூழ்நிலை நிலவுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, வெளியிடங்களிலிருந்து வருகை தருவோரின் தொடர்புகள், இளைய சமூகத்தினரிடம் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை, ஆபாசப் படங்களின் புழக்கம், பெற்றோர், பெரியோர்களுக்கு இளையவர்கள் கட்டுப்படாத தன்மை என்பன இவற்றுள் சிலவாகும். இவ்வாறான நிலைமை பாலியல் துர்நடத்தைகள் அதிகரிக்கவும் எச்.ஐ.வி. என்னும் கிருமி மூலம் எய்ட்ஸ் நோய் பரவவும், பிற பாலியல் தொற்றுநோய்கள் பரவிக்கொள்ளவும் ஏதுவாகின்றது.

இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர் குடாநாட்டில் ஏற்பட்ட நிலைமைகளால் அரச நிர்வாகக் கட்டமைப்புக்களிலும், பொதுமக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள அசாதாரணமான போக்கானது இங்கு சுற்றுச் சூழல் சுகாதாரம் சீர்கெட வழிவகுத்துவிடுகின்றது. சுற்றுச் சூழல் சுகாதாரம் பாதிக்கப்படுவதனால் பிற தொற்றுநோய்களின் தாக்கமும் அதிகரித்துச் செல்வதைக் காணமுடிகிறது. குறிப்பாக மலேரியா, டெங்கு, நெருப்புக்காய்ச்சல் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதில் அக்கறையும் முயற்சியும் எடுப்பதுடன் பொதுமக்களும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இதன் மூலம் சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணவும், தொற்றுநோய்களிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான வாழ்வைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

எச்.ஐ.வி.(HIV) என்ற வைரஸ் பாலியல் உறவு, இரத்தத் தொடர்பு, தாய் ஊடாக (மகப்பேற்றின்போதும், பாலூட்டும் போதும்) பரவுகின்றது. இது ஒருவரின் நோய் எதிர்ப்புச் சக்தித்தொகுதியை ஒட்டுமொத்தமாக தாக்கிப் பலவீனமாக்குவதனால் அவருக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து அல்லது இல்லாதுபோகின்றது. இதனால், அவரைத் தொற்றுநோய்கள் இலகுவாகத் தாக்கி நீண்டகாலம் வாழவிடாது மரணத்தை எதிர்கொள்ள வழிசமைத்து விடுகின்றது.

குடாநாட்டில் எய்ட்ஸ் தொற்று நோயாளர்கள் சிலர் இனங்காணப்பட்டுள்ளனர். இது மக்கள் மத்தியில் மிகுந்த கவலையையும் பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே தான் இவை குறித்து மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வை மேற்கொள்ளவேண்டியது காலத்தின் தேவைகருதியதும் முக்கியமானதுமாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு 24.12.2003 தொடக்கம் 30.12.2003 வரை எய்ட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு வாரமாகப் பிரகடனம் செய்யப்பட்டு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# மதபேத அமைப்புகள் குறித்து விசாரணை நடத்துமாறு பணிப்பு

## பொலீஸ் தலைமையகம் விடுத்தது

கொழும்பு,டிசெ.27

நாட்டில் மதபேதங்களை உருவாக்கும் நோக்கத்துடன் இயங்கி வரும் அமைப்புக்களின் பொய்ப் பிரசாரங்கள் மற்றும் இடையூறுகள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொலீஸ் தலைமையகம் நாட்டின் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது.

ஜனநாயக நடைமுறையின் கீழ் சகல பொதுமக்களும் தத்தமது சமய நம்பிக்கைகளைக் கடைப்பிடிப்பதற்கான உரிமை பாதுகாக்கப்படவேண்டும்.

அத்துடன், இத்தகைய மதபேத அமைப்புக்களின் உறுப்பினர்களால் ஏனைய மதப் பிரிவினர்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் - என்று பொலீஸ் தலைமையகத்தின் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கொழும்பு மாவட்டத்தின் சில பிரிவுகளிலும் தென்பகுதியில் குறிப்பிட்ட சில பிரதேசங்களிலும் மத அடிப்படையிலான சில துன்புறுத்தல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகப் பொலீஸாருக்கு முறையிடப்பட்டிருந்ததை அடுத்தே பொலீஸ் தலைமையகம் இது குறித்து நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. (எ)



தேசிய இளைஞர் சேவை மன்றம் நடத்திய 'இளைஞர் விருது - 2003' போட்டியில், வடமராட்சியைச் சேர்ந்த பாஸ்கரன் நடனக் குழு புதிய நிர்மாணிப்பு நடனப்பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. கொழும்பு, மஹரகமவில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவில் இக் குழுவினருக்குரிய விருதுகள், சான்றிதழ்கள், பரிசுத்தொகைகள் ஆகியவற்றை இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வழங்குவார். பரிசு பெறவுள்ள பாஸ்கரன் நடனக் குழுவினரைப் படத்தில் காணலாம்.

# கல் சிதறிப் பறந்து தாக்கியதில் தொழிலாளி காயம்!

தென்மராட்சி,டிசெ.27

கல் உடைக்கும் இயந்திரத்தினுள் போடப்பட்ட கல் பறந்து அங்கு நின்ற தொழிலாளியைத் தாக்கிக் காயப்படுத்திய சம்பவம் சாவகச்சேரியில் இடம்பெற்றது.

கண்ணிலும், கையிலும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அந்தத் தொழிலாளி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

சாவகச்சேரி, டச்சு வீதியைச் சேர்ந்த *ஏரம்பு குமாரசாமி (வயது 52)* என்பவரே காயமடைந்தவராவார். (ஒ-117)

# நெற்பயிர்களில் இலைச்சுருட்டி நோய்

வரணி,டிசெ.27

வரணிப் பிரதேச வயல்களில் இலைச்சுருட்டி நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளது.

மழை குறைந்திருப்பதை அடுத்து நெற்பயிர்கள் வெளிறியுள்ளதாகவும் - கூறப்பட்டது. (எ-170)

# கஞ்சா வழக்கில் விளக்கமறியல்

கிளிநொச்சி,டிசெ.27

வடமராட்சி கிழக்கின் நெச்சிய வட்டை முள்ளியான் பகுதியில் கஞ்சாவுடன் தமிழீழ காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். கிளிநொச்சி மாவட்டத் தமிழீழ நீதி மன்றத்தில் அவர் ஆஜர்ப்படுத்தப் பட்டபோது அடுத்த மாதம் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-7)


# பயிற்சிப் பத்திரிகையாளர்கள்

'உதயன்' ஆசிரிய பீடத்தில் பயிற்சிப் பத்திரிகையாளர்களாக இணைந்து பணியாற்ற விரும்புவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*பயிற்சிக்காலம்:* ஒரு வருடம்
பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவு வழங்கப்படும்.

ஆகக்குறைந்த கல்வித்தரம் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி. அத்துடன், இயல்பாகவே எழுத்துத் துறையில் ஆர்வமும் மொழி அறிவும் உடையவர்கள் விரும்பத்தக்கவர்கள். ஆங்கிலத்தில் உரையாடும் திறன் மற்றும் மொழி பெயர்ப்பு ஆற்றல் என்பவற்றுடன் அடிப்படைக் கணனி அறிவும் சிறப்புத் தகைமைகளாகக் கொள்ளப்படும்.

தொடர்பு முகவரி உட்பட சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழ்களையும் இணைத்து அனுப்பவும்.

*விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-*

உதயன் மனிதவள சேவை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்ப இறுதித் தினம் : 31.12.2003


# வாசகர் திருமுகம்

## போதனா வைத்தியசாலையில் மலசலகூட அவல நிலை

யாழ். போதனா வைத்தியசாலையில் 'வார்ட்'டில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள், மலசலகூட வசதியின்மையால் பெரிதும் அவஸ்தைப் படுகின்றார்கள். இந்நிலை எல்லா 'வார்ட்'டுகளுக்கும் பொருந்தும். பொது மக்கள் மலசலகூடங்களை நன்றாகப் பாவிப்பதில்லையெனக் காரணம் கூறலாம். இதில் சில உண்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

கொழும்பு போதனா வைத்தியசாலையில் இருக்கும் மலசலகூட வசதிகளைப் பார்க்கும்பொழுது நாம் எவ்வளவு பின்னோக்கித் தள்ளப்பட்டிருக்கிறோமென்பது விளங்கும். அங்கு மலசலகூடங்களைச் சுத்திகரிப்பதற்குத் தனியார் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்கள் சுத்தம்செய்வது சரியான முறையில் நடைபெறுகின்றதா என்பதை அவதானிப்பதற்கு மேற்பார்வையாளர்களும் இருக்கின்றனர்.

எனவே, இந்த நடைமுறையை எமது வைத்தியசாலையிலும் நடைமுறைப் படுத்தினால் நன்றாகவிருக்கும். இது இயலாதவிடத்து மூன்று அல்லது நான்கு மலசலகூடங்களைத் தனிநபர் ஒருவரை வைத்தும் செயலாற்றலாம். இந்நடைமுறை யாழ். பேருந்து நிலையத்தில் இருக்கின்றது. இந்நடைமுறையினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படாமல் தலா 2 ரூபா வீதம் அறவிட்டு அத்தனியாருக்கும் கொடுக்கலாம். இதனால், நிறுவனத்திற்கும் எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது. இதனை உரியவர்கள் கவனத்திற்கொண்டு ஆவன செய்வார்களென விநயமாக மக்கள் கேட்கின்றார்கள்.

*வட-பிராந்திய போக்குவரத்துச் சபை,*
*கோண்டாவில்.*

சு.மணிவாசகன்.
பொது முகாமையாளர்.

## பரிசுகளின் பெயரால் 'பரிசுகேடுகள்' வேண்டாம்!

15.12.2003 ஆம் திகதிய 'உதயனில்' மு.கணபதிப்பிள்ளை என்பவர் எழுதியுள்ள "இலக்கியப் பெருவிழா பற்றிய விவரங்களை வெளியிடுக" என்ற கடிதத்தில் கண்டுள்ள கோரிக்கை நியாயமானது என்பதை நியாய உணர்ச்சியுள்ள இலக்கியவாதிகள் யாவரும் ஒருமனதாக ஒப்புக்கொள்வர்.

இலக்கியப் பரிசுகள் தாம் ஓர் ஆக்கத்தின் தகைமையைத் தீர்மானிக்கும் அளவுகோல்களல்ல என்றாலும், பரிசுகளின் பேரால் 'பரிசுகேடுகள்' நடப்பதை அனுமதிக்கவும் இயலாதுதானே!

அகில இலங்கை ரீதியான பரிசில்களும் அதிலும் முக்கியமாக வடக்கு - கிழக்கு மாகாண சபையின் இலக்கியப் பரிசில்களும் கடந்த சில ஆண்டுகளில் நேர்மையற்ற விதத்தில் வழங்கப்படுவதாகவே பொதுவான குற்றச்சாட்டு உள்ளது.

உதாரணமாக, 2002ஆம் ஆண்டிற்காகக் கடந்த ஐப்பசியில் வழங்கப்பட்ட பரிசுகளில், 'கவிதை'க்கான பரிசுகளில் ஒன்று 'மொழி பெயர்ப்பு'க்கு வழங்கப்பட்டுள்ளமையையும், அதற்கு முந்திய ஆண்டில் இரண்டாம் பதிப்பாக வந்த ஒரு சிறுகதைத் தொகுப்பிற்கு பரிசு வழங்கப்பட்டமையையும் குறிப்பிடலாம். அத்துடன் "வேண்டியவர்களைத் திருப்திப்படுத்தும்" பாங்கில் 'பல்துறை' (2001இல்) மற்றும் 'கவிதை'(2002) போன்ற துறைகளில் பலபேருக்குப் பங்கிட்டுப் 'பரிசு' என்பதையே அர்த்தமற்றதாக்குகிறது!

இந்த அடிப்படைகளில் நோக்குகையில் திரு.கணபதிப்பிள்ளையின் கோரிக்கை நியாயமானது. அதைத் தெளிவுபடுத்த வேண்டிய கடமை சம்பந்தப்பட்டோருக்கு உண்டு.

*அரியாலை.*

இரா.சுரேந்திரபாலன்.

## மோட்டார் பதிவுக் கிளைக்கு எத்தனை தடவை அலைவது?

யாழ்ப்பாணம் மோட்டார் பதிவுக் கிளையின் உத்தியோகத்தர்களின் அசமந்தப்போக்கினால் என்னைப்போல பலர் பல தடவைகள் எமது ஏனைய வேலைகளை ஒதுக்கிவிட்டு அலையவேண்டியுள்ளது. எனது அனுபவத்தைப் பாருங்கள். 12 தடவைகள் அங்கு சென்றுவிட்டேன். இன்னும் எனது சைக்கிளுக்கான புத்தகம் நம்பர் என்பன கிடைக்கவில்லை.

புதிய எனது மோட்டார் சைக்கிளை பதிவுசெய்ய ஒக்ரோபர் 31ஆம் திகதி பாஸ்போட் படங்களுடன் சென்றேன். முத்திரை அளவு புகைப்படம் எடுத்து, கிராம சேவையாளரைக்கொண்டு உறுதிப்படுத்திவரும்படி கூறினர். அவ்வாறே செய்துகொண்டு சென்றபோது, இன்று நேரம் முடிந்துவிட்டது. திங்கட்கிழமை (10/11) வாருங்கள் என்றனர். 3 ஆவது தடவையாக திங்கள் சென்றேன். ஆவணங்களை வாங்கிப் பரிசோதித்தனர். பின்னர் 18 ஆம் திகதியே பரிசோதகர் வருவார். அன்று வாருங்கள் என்றனர். 18 ஆம் திகதி 4ஆம் முறையாக சென்றேன். அங்குவந்த எல்லோரதும் விண்ணப்பங்களை வாங்கி அடுக்கினர். பரிசீலனை செய்யவேண்டும் எனக் கூறி மாலையில் வருமாறு அறிவித்தனர். அன்று மாலை 5ஆவது தடவையாக சென்றேன். வேலைகள் முடியவில்லை எனக் கூறி எம்மில் 15 பேரை மறுநாள் வருமாறு கூறினர். மறுநாள் 6 ஆவது தடவையாக சென்றேன். முதல் நாள் வந்தவர்களில் 6 பேர் மட்டுமே வந்திருந்தனர். வந்தவர்களின் படிவங்களை முதலில் பரிசீலிக்குமாறு கோரினோம். ஆனால், அவர்கள் எல்லோரது படிவங்களையும் பரிசீலித்தனர். மீண்டும் 4 மணிபோல் 02.12.2003 அன்று வந்து நம்பர், புத்தகம் பெறுமாறு கூறினர். அன்று 7 ஆவது தடவையாகச் சென்றேன். அன்றும் ஏதோ காரணம்கூறி மறுநாள் வருமாறு கூறினர். 3 ஆம் திகதி எட்டாம் முறையாகச் சென்றேன். அன்றும் தரவில்லை. 9ஆம் திகதி வருமாறு கூறி அனுப்பினர். அன்று 9ஆவது தடவையாக காலையில் சென்றேன். மாலை 3 மணிக்குத் தருவதாகக் கூறினர். 3 மணிக்கு 10 ஆவது முறை சென்றபோது உரிய உத்தியோகத்தர் மரண வீடு காரணமாக வரவில்லை. இரண்டு நாள் கழித்து வாருங்கள் என்றனர். காலையிலேயே இதனைக் கூறி இருக்கலாமே எனக் கூறிவிட்டுவந்தேன். 12 ஆம் திகதி 11ஆவது தடவையாகச் சென்றேன். அன்றும் பெறமுடியவில்லை. 15 ஆம் திகதி திங்கட்கிழமை வருமாறு கூறினர். அன்று எம்மை விரட்டுவதுபோல கூறி, கதவையும் சாத்திவிட்டனர்.

எப்போது எமக்கு அவற்றை வழங்கப்போகிறார்கள். நாம் இன்னும் எத்தனை தடவை எமது ஏனைய பணிகளை ஒதுக்கிவிட்டு அலைவது? - மோட்டார் திணைக்களப் பதிவு உத்தியோகத்தர்களிடம் மனிதம் செத்துவிட்டதா? அரசாங்க அதிபரோ, உயர் அதிகாரிகளோ நடவடிக்கை எடுப்பார்களா?

*மானிப்பாய் வீதி,*
*உடுவில்.*

ஐ.தியாகராசா.

# ஆயப்பகுதிப் பிரதிநிதிகளுடன் வர்த்தகர்கள் கலந்துரையாடல்

தென்பகுதியில் இருந்து பொருள்களை எடுத்துவரும் வர்த்தகர்களுக்கும் நிதித்துறையின் ஆயப்பகுதியினருக்குமான கலந்துரையாடல் நாளைமறு தினம் திங்கட்கிழமை காலை 10மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

தென்பகுதியிலிருந்து பொருள்களை எடுத்துவரும் சகல வர்த்தகர்கள் தென்பகுதியில் இருந்து லொறிகளில் பொருள்களை ஏற்றி இறக்கும் முகவர்கள் ஆகியோரைத் தவறாது இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரன் கேட்டுள்ளார்.(ஒ-10)


உ



## யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில்
## கஜமுகாசுர சங்கார உற்சவம்

பிள்ளையார் பக்தர்களே!

இன்று (27.12.2003) சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு உற்சவம் ஆரம்பமாகும்.

**விநாயக ஷஷ்டி உற்சவம்**

காலை 11.00 மணிக்கு அபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி பிள்ளையார் கதை பூர்த்தியாகும். தொடர்ந்து பிற்பகல் 3.00 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் பஞ்சமுகார்ச்சனையும் நடைபெற்று பஞ்சமுக விநாயகர் திருவீதியுலாவும் இடம்பெறும்.

**திருவெம்பாவை பூசை**

29.12.2003 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு திருவெம்பாவைப் பூசை நடைபெறும்.

*அடியார்களை அருள்பெறவருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.*

- பிள்ளையார் பணியில்
ஆலய நிர்வாகம்.

(26361) (24-12-17)


## சாயி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.27

ஸ்ரீ சத்யசாயிபாபாவின் 78ஆவது பிறந்த தினத்தையொட்டி 'அஷ்டோத்ர சத நாமாவளி' என்ற கைநூல் வெளியிடப்பட்டுள்ளது.

இலவச வெளியீடான இதனை யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்திலும், இல. 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள பகவான் மருந்தகத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.


## தொலைபேசி
## விற்பனைக்கு

மொபிடெல். (வெளிச்செல்லும் அழைப்புக்கள் 6.50/-) மோட்டோறோலா தொலைபேசி இணைப்புக்கள் விற்பனைக்குண்டு.
(மேசைத் தொலைபேசி வசதிகளுடன்)
தொடர்பு:
0777-724884.
(26358)


## அறிவித்தல்
## பின்னுறுதித் தீர்வை
## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

*வழ. இல.: மணநீக்கம்/187*

**தவராஜசிங்கம் பெண் கஜனா**
(மகேந்திரநாதனின் மகள்)
ஊரெழு மேற்கு, ஊரெழு.
- வழக்காளி.

எதிராக

**தம்பிப்பிள்ளை தவராஜசிங்கம்**
கோண்டாவில் வடக்கு தற்போது
ஜேர்மனி *(சரியான விலாசம் தெரியவில்லை)*
- எதிராளி

இவ்வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் 2003 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு. இ. வசந்தசேனனும் சமுகமாயிருக்க எதிராளியின் தற்போதைய விலாசம் தெரியாதபடியால் உதயன் பத்திரிகையில் 05.10.2003 அன்று எதிராளிக்கான அழைப்புக்கட்டளை பிரசுரிக்கப்பட்டு, எதிராளி சமுகமளிக்காதபடியால் ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியம் பதியப்பட்டு வழக்காளியின் பிராது, ஆவணம், சாட்சியம் ஆகியவற்றை மன்று பரிசீலித்து வழக்காளியை எதிராளி வன்மமாகப் பிரிந்து வாழ்வதால் எதிராளியை வன்ம உறவறுப்பு என்ற குற்றத்திற்கு குற்றவாளியாகக்கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையே 2002 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 18 ஆம்திகதி நடைபெற்ற பதிவுத்திருமணத்தை இரத்துச்செய்து பின் முற்றாகும் தீர்வை வழங்கப்படுகிறது. இப்பின் முற்றாகும் தீர்வையின் பிரதி 'உதயன்' பத்திரிகையில் பிரசுரித்து, பிரசுரித்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யத்தவறும் பட்சத்தில் இப்பின்முற்றாகும் தீர்வை முற்றானதாக்கப்படும்.

2003 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி.

வரைவு:- இ.வசந்தசேனன்
வழக்காளியின் சட்டத்தரணி

ஒப்பம்
**ச.இளங்கோவன**
மாவட்ட நீதிபதி,
மல்லாகம்.

மன்றின் கட்டளைப்படி

திகதி: 23.12.2003

ம.செல்வரத்தினம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

(சி-32321) (25-24-12-17)


## ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
## வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

**WESTERN UNION | MONEY TRANSFER** SM **வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்**

மூலம்

*20 நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க*

*எம்மிடம் நாடுங்கள் :*

## ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5392,
Fax: 222 3214,
E-mail: smskr @ eureka.lk.

(C/32309)(34-24-12-17)

சிவன் கோவில் வீதி,
காரைநகர்,
T.P.: 0602212472.



# வாங்கிவிட்டீர்களா?
# லீலா
# பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

லீலா

பஞ்சாங்க சித்திரக் கலண்டர், டயரி வகைகள் புதுப்பொலிவுடன் வெளிவந்து விரைவாக விற்பனையாகின்றன.

இன்னும் சொற்ப கலண்டர், டயறிகளே கைவசம் உள்ளதால் தங்களுக்கு தேவைப்படும் கலண்டர், டயறிகளை எம்மிடமோ அல்லது எமது விற்பனையாளர்களிடமோ உடன் பெற்றுக்கொள்ளவும்.

**தயாரிப்பாளர்கள்:**

## லீலா பிறஸ் (பிறைவேற்) லிமிட்டட்

சின்னத்துரை கட்டடம்,
182, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.
தொலைபேசி: 2325930, 2334332
பக்ஸ்: 2334332

(சி-32323) (24-12-17)


## நீங்கா நினைவில் ஓராண்டு

தோற்றம்
25
12
1934



மறைவு
06
01
2003

**திருமதி அன்னபூரணம் கந்தசாமி**

திதி: சதுர்த்தி

*தாரத்தின் இலக்கணமாய்*
*தாய்மைக்குத் தனித்துவமாய்*
*வாழ்வின் வழிகாட்டியாக*
*உயர்ச்சியின் உறுதுணையாக*
*காலமெல்லாம் எமக்கென வாழ்ந்த அன்னையே!*
*நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவுகள் நிறைந்திருக்கும்.*

*"பூரணி வாசா"*
*பண்ணாகம்.*

- அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(26355) (32-24-12-17)

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை கிருபாகரன்

(பொறியியலாளர் - கனடா)

வடமராட்சி, கரணவாய் மேற்கு, சோளங்கனைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கிருபாகரன் அவர்கள் 22-12-2003 திங்கட்கிழமை முருகனடி சேர்ந்தார்.

அன்னார் யாழ். வடமராட்சி, கரணவாய் மேற்கு (சோளங்கன்) வி.எஸ்.தாமோதரம்பிள்ளை - சின்னமணி ஆகியோரின் பாசமிகு புதல்வரும் பிரமிளா அவர்களின் அன்புக் கணவரும், கிருஷாளியின் அன்புத் தந்தையும், விவேகானந்தன், நகுலாம்பிகை ஆகியோரின் பாசமிகு மருமகனும், கங்காதரன் (கஜா மோட்டோஸ்), சுதாதரன் (நெல்லியடி), பாஸ்கரன் (கொழும்பு), மனோகரன் (சுவிஸ்), கருணாகரன் (லண்டன்), சியாமளா (கொழும்பு), ஜனார்த்தனன் (லண்டன்), துபாபரன், ஹரிஹரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரங்கநாதன், கமலாதேவி, வாசுகி, சரோஜாதேவி, ராணி, சண்முகாஞ்சலி, அனுஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரம்மியா, கமல்நாத் ஆகியோரின் அன்பு மாமாவும் குமரதாஸ், சதீஸ்வரதாஸ், சாயிதேவதாஸ், கஜானனி, அமிர்தசொரூபன், சாந்தரூபன், துர்ஷியா, ஜேதர்சினி, கஜனி, சுவேதன், ஆதினன், அனுஜா, அஜந்திகா, கீர்த்திகா, கௌசல்யா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2003) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பழமுதிர்சோலை" (சோளங்கன்)*
*கரணவாய் மேற்கு, கரவெட்டி*
*கரவெட்டி.-* T.P.: 021 2263918

தகவல்:-
வி.எஸ்.தாமோதரம்பிள்ளை
*(குடும்பத்தினர்).*

(26352)(35-24-12-17)

# தமிழ்த் திரையுலகைத் திருத்த தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம்

தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆங்கிலப் பெயர் சூட்டுவது, திரைப்படங்களில் ஆபாசம் மற்றும் வன்முறைக்கு முதன்மை இடமளிப்பது போன்றவற்றால் நேரிடும் பண்பாட்டுச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தமிழகத்தில் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் என்ற புதிய இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பின் பொதுச் செயலர் தொல்திருமாவளவன், ஒருங்கிணைப்பாளராக சோழ நம்பியார், செயலாளராக டாக்டர் வேலாயுதம் ஆகியோர் செயற்படுவர்.


சென்னையில் நடந்த தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இரா.இளங்குமரனார் (திருவள்ளுவர் தவச்சாலை), டாக்டர் ந.சேதுராமன் (மூவேந்தர் முன்னணிக் கழகம்), புலவர் இறைக்குருவனார் (தென்மொழி அவையம்), இரா. பத்மநாபன் (உலகத் தமிழ்ப் பேரமைப்பு), முனைவர் தமிழப்பன் (உலகத் தமிழ் நூலக அறக்கட்டளை), முகம் மாமணி (தமிழ்ச்சான்றோர் பேரவை), கி.த பச்சையப்பன் (தமிழ் உரிமைக் கூட்டமைப்பு), புலவர் த. சந்தரராசன் (தலைநகர் தமிழ் சங்கம்), கவிஞர் அறிவுமதி, ஓவியர்கள் வீரசந்தானம், புகழேந்தி ஆகியோர் இவ்வமைப்பின் உயர்நிலைக்குழு உறுப்பினர்களாகப் பணியாற்றுவர்.

பொங்கல் திருநாளையொட்டி வெளியாகும் தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலப் பெயர்களைச் சூட்டியிருந்தால் அவற்றை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் - தமிழ்ப் படங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே சூட்டவேண்டும் என்றும் - வலியுறுத்தித் திரைப்படத் துறையினருக்குக் கடிதம் எழுதுவதெனக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் கோரிக்கைகளைப் பொருட்படுத்தாவிடில், அத்தகைய படங்களைத் திரையிடவே கூடாது என்றும் மக்களைத் திரட்டித் தடுப்பது என்றும் ஆங்கிலப் பெயர் அழிப்புப் போராட்டங்களை முன்னெடுப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## அக்கரைச் சீமையிலே...



தமிழகத்தில் மேட்டூரை அடுத்த தாதாபுரத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் சுப்பிரமணியின் வீட்டுத் தோட்டத்தில் காய்த்திருக்கும் நட்சத்திரப் பப்பாளி.

# மின் அஞ்சலில் மிரட்டல்; சிறுவன் கைது!

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவிருக்கும் நிதித்துறை மாநாட்டுக்கு வரும்போது முன்னாள் பிரதமர் கொலைசெய்யப்படுவார் என்று மின் அஞ்சல் மூலம் மிரட்டிய 16வயது அமெரிக்கச் சிறுவன் கைது செய்யப்பட்டான்.

அவனைப் பொலீஸார் இளவயதுக் குற்றவாளிகளுக்கான நீதிமன்றத்தில் நிறுத்தினர். 'இனி ஒழுங்காக நடந்துகொள்வேன்' என்று அச்சிறுவனும் 'அவன் ஒழுங்காக நடந்துகொள்வதை நாங்கள் பார்த்துக் கொள்வோம்' என்று அவனுடைய பெற்றோரும் உறுதிமொழி எழுதித் தருமாறு கூறிய நீதிமன்றம், சிறுவனின் இளவயது காரணமாக எச்சரித்து விடுதலைசெய்தது.

துபாயில் கடந்த செப்ரெம்பர் மாதம் நிதித்துறை மாநாடு நடந்தது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் நிர்வாகிகள் அதில் கலந்துகொண்டனர். ஒரு முன்னாள் பிரதமரும் அதில் பங்கேற்றார். அவரைக் கொலை செய்யப் போவதாகவும், தங்களுக்கு அல்கெய்டாவின் ஆதரவு இருப்பதாகவும் 3முறை மின் அஞ்சல்கள் மூலம் மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு தகவல்கள் அனுப்பப்பட்டன.

இந்த மின்அஞ்சல் எங்கிருந்து அனுப்பப்பட்டது என்பதை நிபுணர்கள் உதவியுடன் பொலீஸார் கண்டுபிடித்தனர். பின்னர் அந்தச் சிறுவனைக் கைது செய்தனர். சில நாள்கள் காவலில் வைத்திருந்தனர். அல்கெய்டாவுடன் அவனுக்கு உண்மையிலேயே தொடர்பு இல்லை என்பதையும் குறும்பாக விளையாடுவதாக நினைத்து இதைச் செய்திருந்தான் என்பதையும் பொலீஸார் தெரிந்துகொண்டனர்.

முன்னாள் பிரதமரின் பெயரையும் அச்சிறுவனின் பெயரையும் தெரிவிக்க பொலீஸார் மறுத்துவிட்டனர்.



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள பாக்ரம் விமானப்படைத் தளத்தில் ''நத்தார் தாத்தா' வேடத்தில் இயந்திரத் துப்பாக்கியுடன் வலம் வந்த அமெரிக்க விமானப்படை வீரர்.



இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் கடலில் நத்தார் தாத்தா வேடத்தில் முத்துக்குளிக்கும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள்.

# 'டிஸ்னி' நிறுவனம் மீது கதை திருடிய குற்றச்சாட்டு



படத்தில் ஒரு காட்சி

உலகப் புகழ்பெற்ற 'வால்ட் டிஸ்னி' நிறுவனம் தனது கதையைத் திருடித் திரைப்படமாக்கியுள்ளதாகக் குற்றஞ்சாட்டி பிரெஞ்சு எழுத்தாளர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

'பைண்டிங் நிமோ' (FINDING NEMO) என்ற சித்திரத் திரைப்படத்தை டிஸ்னி நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது. இந்த ஆண்டில் அதிக வசூலைப்பெற்ற திரைப் படங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்த நிலையில் தனது கதையைத் திருடியே இந்தத் திரைப்படம் தயாரிக்கப் பட்டுள்ளதாக பிராங் லீ கல்வஜ் என்ற பிரெஞ்சு எழுத்தாளர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இவர் கடந்த ஆண்டு 'கோமாளி மீன்' (Pierrot the clown fish) என்ற பெயரில் சிறுவர் கதை ஒன்றை வெளியிட்டிருந்தார். இந்தக் கதையில் வரும் கதாபாத்திரங்களின் நகலாக டிஸ்னி நிறுவனத்தின் திரைப்படத்திலும் கதாபாத்திரங்கள் உள்ளன.

இதனையடுத்தே டிஸ்னி நிறுவனத் திடமிருந்து நஷ்டஈடு பெற்றுத் தரும்படி கேட்டு நீதிமன்றத்தை அணுகியுள்ளார் பிரெஞ்சு எழுத்தாளர்.

# ஆங்கிலத் திரைப்படம் வசூலில் சாதனை

அமெரிக்காவில் தயாரான, 'திலோர்ட் ஒவ் த ரிங்ஸ் - திரிடர்ன் ஒவ் த கிங்' என்ற ஆங்கிலத் திரைப்படம் திரையிடப்பட்ட முதல் 5நாள்களில் ரூ1130கோடி (125மில்லியன் டொலர்கள்) வசூலித்தது என்று வட அமெரிக்கத் திரையரங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

'ஸ்டார்வோர்ஸ்', 'தி பேண்டம் மெனஸ்' ஆகிய 1999ஆம் வருடத்தில் வெளியான திரைப்படங்கள் அள்ளித்தந்த வசூலை 'திலோர்ட் ஒவ் த ரிங்ஸ்' விஞ்சிவிட்டது. 'ஸ்டார் வோர்ஸ்' திரைப்படம் 105 மில்லியன் டொலர்கள்தான் சம்பாதித்தது.

'திலோர்ட் ஒவ் த ரிங்ஸ் - த டூ டவர்ஸ்' என்ற திரைப்படம் 2002 டிசெம்பரில் வெளியாகி 102மில்லியன் டொலர்களை ஈட்டியது. அது இப்போது 3வது இடத்துக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

தொகுப்பு : மதுமதி



இந்திய மாநிலம் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த 33அடி உயர 'நத்தார் தாத்தா' உருவம்.

# சிறுவனை வெட்டிய தாதிக்குச் சிறை!

இரண்டு வயதுச் சிறுவனின் பிறப்புறுப்பைக் கத்தியால் வெட்டித் துண்டித்த தாதிக்குச் சிங்கப்பூர் நீதிமன்றம் ஒன்றரை ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது.

இந்தோனேசியப் பெண்ணான சுகர்த்தி சுமிதோ வயது (22) அச்சிறுவனைப் பராமரிக்கும் தாதிப் பணியைச் செய்து வந்தார்.

சம்பவ நாளன்று குளித்து முடித்த பின் சிறுவன் ஓடியாடிக்கொண்டிருந்தான். அவனைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளவில்லை என்று தாதியை சிறுவனின் பெற்றோர் கண்டித்தனர்.

அப்போது கத்தியால் கோழி இறைச்சியை நறுக்கிக்கொண்டிருந்த தாதி, அந்தச் சிறுவனைத் துரத்திப் பிடித்து பிறப்புறுப்பைத் துண்டித்தார்.

சிறுவனின் அழுகுரலைக் கேட்டு அங்கு சென்ற மற்றொரு பணிப்பெண் தான் இக்கொடூரச் சம்பவத்தைக் கண்டு குடும்பத்தினரிடம் தெரிவித்தார்.

# உலக சாதனை முயற்சியாக 450 கலைஞர்கள் நடனம்

தமிழகத்தில் உலக சாதனை முயற்சியாக, ஒரே மேடையில் 450 சினிமா நடனக் கலைஞர்கள் நடனமாடவுள்ளனர்.

'ஸ்டெப்ஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சிக்கு சினிமா நடனக் கலைஞர்கள் சங்கம் மற்றும் நடன இயக்குநர்கள் சங்கம் ஏற்பாடுசெய்துள்ளன.

இந்த நிகழ்ச்சி சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் ஜனவரி 26ஆம் திகதி நடைபெறுகிறது. இதற்காக மிகப் பெரிய மேடை அமைக்கப்படுகிறது. மொத்தம் நான்கரை மணிநேரம் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், பல பாடல்களுக்கு நடனக் கலைஞர்கள் நடனமாடுகின்றனர்.

இதுவரை ஒரே மேடையில் ஒரே நேரத்தில் 400 கலைஞர்கள் நடனம் ஆடியமைதான் உலக சாதனையாக உள்ளது. தற்போது அதை முறியடிக்கும் விதத்தில் 450இற்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்கள், 10 திரைப்படக் கதாநாயகிகள் முன்னணி கதாநாயகர்கள் நடனமாடுவர்.

பிரபுதேவா, ரகுராம், கலா, தாரா உட்பட பல்வேறு நடன இயக்குநர்கள் நடனங்களை இயக்கவுள்ளனர். அனைவரும் ஒரே நேரத்தில் பங்கேற்கும் பாடலுக்கான நடனத்தை நடிகர் கமல்ஹாசன் இயக்குகிறார்.

# யாழ்ப்பாணம் - மாநகரசபை

## இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2004

கீழ்க்காணப்படும் இறைச்சிக்கடைகளை 01.01.2004ஆம் திகதி முதல் 31.12.2004ஆம் திகதி வரையான ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் ~ ரூபா 300/- ~ (வற் உட்பட).
கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி ~ 30.12.2003ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிவரை.
கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி ~ 30.12.2003ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணி.
கேள்விகள் திறக்கும் திகதி ~ 30.12.2003ஆம் திகதி மு.ப. 11.30 மணி.

| விவரம் இறைச்சிக்கடைகள் | கடை இல. | கேள்விப்பிணைப்பணம் | சபையால் நிர்ணயித்த தொகை |
|---|---|---|---|
| 01. குருநகர் மாட்டி.. கடை | .3 | 5000/- | 174330/- |
| 02. " " " | .2 | 5000/- | 155250/- |
| 03. " " " | .1 | 5000/- | 253800/- |
| 04. நரிக்குண்டு " " | .1 | 5000/- | 274500/- |
| 05. நாவாந்துறை மாட்டி. கடை | .5 | 2500/- | 9450/- |
| 06. நாவாந்துறை மாட்டி. கடை | .1 | 2500/- | 59400/- |
| 07. நாவாந்துறை மாட்டி. கடை | .7 | 2500/- | 9630/- |
| 08. நாவாந்துறை மாட்டி. கடை | .8 | 2500/- | 5490/- |
| 09. நாவாந்துறை மாட்டி. கடை | .9 | 2500/- | 5490/- |
| 10. நாவாந்துறை கருவாட்டுக் கடை | .11 | 1000/- | 3510/- |
| 11. நாவாந்துறை கருவாட்டுக் கடை | .12 | 1000/- | 3510/- |
| 12. புங்கன்குளம் ஆட்டி. கடை | .1 | 2500/- | 36360/- |
| 13. பண்ணை ஆட்டி. கடை | .3 | 2500/- | 20400/- |
| 14. குருநகர் ஆட்டி. கடை | .7 | 2500/- | 9450/- |
| 15. கஸ்தூரியார் வீதி து.ச.வ.பா. நிலையம் | | 2500/- | 49770/- |
| 16. முஸ்லிம் கல்லூரி வீதி ஆட்டி. கடை | | 2500/- | 25000/- |

குத்தகையாளரே இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும். குறித்த இடம் மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திக்கும் ஜின்னாவீதிக்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
26.12.2003 (சி.31967) (31-11-16-32)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றோம்

# கானான் ஜெப ஆலயம்

## நத்தார் பண்டிகை - 2003 முன்னிட்டு

வழங்கும் : இன்னிசை கானங்கள் • கண்ணுக்கினிய நடனங்கள் • நாடகங்கள்

## ஒளிவிழா நிகழ்ச்சிகள்

26-12-2003 வெள்ளிக்கிழமை நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

*இன்று (27-12-2003) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு* மருதனார்மடம்-பிரதேச சபை மைதான அரங்கு- வலிகாமம்தெற்கு.

*நாளை (28-12-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு* கானான் ஜெப ஆலயம் - இருபாலையில் விசேட ஆராதனையும்

வட்டுக்கோட்டை, சங்கரத்தை - திருஞானசம்பந்தர் வீதியிலுள்ள கானான் சிறுவர் இல்லத்தில் மாலை 3.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

*29 ஆம், 30ஆம் திகதிகளில்* இருபாலை கானான் ஜெப ஆலயத்தில் காலை 9.30 மணிக்கு சிறுவர் பாசறை, சிறுவர் நிகழ்ச்சிகளும் காலை 10.00 மணிக்கு விசுவாசிகளுக்கு வேதபாடமும் ஜெபமும் இடம்பெறும்.

31-12-2003 புதன்கிழமை இரவு 7.00 மணிக்கு விழிப்பிரவு ஆராதனையும் 01-01-2004 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு புதுவருட ஆராதனையும் கோப்பாய்-இருபாலை கானான் ஜெப ஆலயத்தில் இடம்பெறும்.

## யாவரும் திரண்டு வருக!

அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்
அவருக்கு "இயேசு" என்று பெயரிடுவாயாக
ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றார்.

**மத் : 1 - 21**

• எல்லா நிகழ்ச்சியின் முடிவிலும் வியாதி, பில்லி சூனியம் பிடிக்கப்பட்டவர்களுக்காக ஜெபிக்கப்படும்.

*விசேட செய்தி அளிப்பவர்:*

வணக்கத்துக்குரிய ஆயர் கலாநிதி அல்பேட் V.ஜெபநாயகம் அடிகளார்
B.Sc. M.Phil; D.D.

அவர் நாமம் அதிசயமானவர் ஏசாயா 9.6 (C-31965) (32-12-16)

தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள் 2004
- பாடசாலைகளுக்கான வெளியீடு
- தனியார் கல்வி நிறுவனங்களுக்கான வெளியீடு
- தனிப்பட்டவர்களுக்கான வெளியீடு

28.12.2003முதல்: நேரடியாக/முகவர் மூலம்/தபால் மூலம்
மொத்தமாகவும் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்

விபரங்கட்கு **சுந்தர் வெளியீடு**
844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☎ 021 222 7086



உ

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன்

## தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம்

அம்பிகை அடியார்களே!

எல்லாம்வல்ல அம்பிகையின் திருவருளால் எதிர்வரும் 29.12.2003 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில கொடியேற்றமும் 06.01.2004 செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு தேர் 07.01.2004 புதன்கிழமை பகல் 11.00 மணிக்கு தீர்த்தோற்சவம் என்பனவும் நடைபெறவுள்ளன.

அம்பிகை அடியார்கள் அனைவரும் அருள்பெற வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இக்கோயிலின் பெயரால் பணமோ, பொருள்களோ ஒருவரிடமும் கொடுக்கவேண்டாம். ஆலய காரியாலயத்தில் மாத்திரம் கொடுக்கவும்.

மட்டுவில். (26374)(34-12-16-32)

சி.சிவகுரு,
தர்மகர்த்தா.

## நல்லூர் பிரதேச சபை ஆதனவரி அறிவித்தல் 2003/ நல்லூர்/ கொக்குவில் உப அலுவலகங்கள

2003ஆம் ஆண்டு 4ஆம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 31.12.2003ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக எதுவித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விவரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் .... 15%
ஏனைய காணிகள், கட்டடங்கள் .... 20%

நிலுவை உட்பட 2003ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987ஆம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச்சட்டம் இல. 134 (5) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருளகள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

## நல்லூர் பிரதேச சபை நல்லூர்/ கொக்குவில் உப-அலுவலகங்கள் ஆதனவரி அறிவித்தல் - 2004

1987ஆம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச்சட்டம் இல. 15இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு நடப்பு வருடம் அறிவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2004ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2004ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை 31.01.2004ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தந்த கந்தாயத்தில் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15% மும் ஏனைய ஆதனங்களுக்கு 20% மும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்படவேண்டும். எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31.01.2004 ஆம் திகதிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரி இறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிரதேச சபை,*
*நல்லூர்.*
*24.12.2003.* (சி-31968)(16-12-32)

திருமதி பு.சிவலிங்கம்,
செயலாளருக்காக.

## 12 ஆம் ஆண்டு நினைவுப்பூக்கள்

மலர்வு 23 - 05 - 1949



உதிர்வு 10 - 01 - 1992

அமரர்

## இராசையா கந்தசாமி

(கீதா ஆபரண மாளிகை உரிமையாளர்)
திதி: பஞ்சமி 27.12.2003

மனிதரில் மாணிக்கமாய் எம்குல திலகமாய் மாண்புடன்
இவ்வுலகில்
பாசமுடனும் பண்புடனும் பார்போற்ற வாழ்ந்து மறைந்த
திருவிளக்கே!
பன்னிரண்டு ஆண்டுகள் ஆனாலும் உங்களுக்காக
நாம் உள்ளத்தில் ஏற்றிய
மணிவிளக்கு எம் உயிர் உள்ளவரை பிரகாசிக்கும்
தந்தையே!

*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (26880) (25-12-16-32)

பிரிவால் துயருறும்:
மனைவி,
பிள்ளைகள்.

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி தங்கவேலு குணலட்சுமி**

( விதுஷா கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

தோற்றம் -10.03.1937

மறைவு - 19.12.2001

திதி : 27.12.2003



அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

கணவர், சகோதரன், சகோதரி, பெறாமக்கள், மருமக்கள்.

*ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.* (26387)(36-18-11)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

மலர்வு 05 . 02 . 1926



உதிர்வு 27 . 11 . 2003

**அமரர் நாகலிங்கம் சின்னத்துரை**

(முன்னாள் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க களஞ்சியப் பொறுப்பாளர்)

திதிநாள்: சதுர்த்தி (27.12.2003)

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும்,தபாலிலும், தொலைபேசியிலும் ஆறுதல் பகிர்ந்த அன்புள்ளங்களுக்கும் குடும்பத்துடன் இணைந்து உறுதுணையாக நின்று உதவி புரிந்தோருக்கும் கிரிகைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அந்தியேட்டிக்கிரியை 27.12.2003 சனிக்கிழமை அவரின் பிறவுன் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.


*T.P.: 0777 274462 (யாழ்),*
*0114612394 (கொழும்பு),*
*0033134727532 (பிரான்ஸ்),*
*இல.10, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(26398)(36-11-18)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 10 . 1924



மறைவு 07 . 01 . 2003

**அமரர் சீனியர் வைத்தியலிங்கம்**

ஆண்டொன்று போனாலும் அன்புடைய உன்னுருவம்
எம் உள்ளம்தனிலென்றும் நிலைநிற்கும் எம் தலைவா
மீண்டிங்கு வந்தொருகால் காட்சிதனை தாராயோ
வேண்டுகின்றோம் தெய்வம் தனை
சாந்திபெற உன் ஆத்மா.

*இலந்தைக்காடு, வல்வெட்டித்துறை.* (26396)(36-11-18)

-குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் இராசரட்ணம்

வளாக ஒழுங்கை, திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் இராசரட்ணம் 25.12.2003 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் இலங்கைநாயகம் (இளைப்பாறிய சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி - மன்னார்), லக்கினேஸ்வரி, மங்கையர்க்கரசி (கனடா), அரசநாயகம் (ஜேர்மனி), செல்வநாயகம் (ஜேர்மனி), பாக்கியலட்சுமி, இராசேஸ்வரி (கனடா), தனநாயகம் (கனடா), சியாமளா (கூட்டுறவுப் பரிசோதகர் - கூட்டுறவுத் திணைக்களம், மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானேஸ்வரி, அமரர் நித்தியானந்தன், இராஜகோபால் (கனடா), செல்வப்புனிதவதி (ஜேர்மனி), திலகவதி (ஜேர்மனி), அமரர் குகதாஸன், பேரின்பசிவம் (கனடா), சாந்தினி (கனடா), சண்முகலிங்கம் (பிரதி அதிபர் மன் .சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் சிவக்கொழுந்தின் அன்புச் சகோதரியும் அமரர் செல்வரட்ணம், அமரர் தங்கரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் திருமதி தயாபரன் நாகலதா (சர்வோதயம் - கொழும்பு), இலங்காதரன், திருமதி குலரத்தினம் யசோதா (யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), முகுந்தன், திருமதி சந்திரகுமார் கவிதா (கிராம உத்தியோகத்தர், J/98), நிமலன், ரயூரன், ராஜினி, றஜந்தினி, ரஜிதா, அன்பழகன், அரவிந்தன், அன்பரசி, அஜந்தன், அனுஷா, மயூரி, பிரியதர்சன், ஐங்கரன், பிரகாஸ், பிரதீபா, றதீஸ், சிந்துஜா, நிரோசா, நிதர்ஷன், கஸ்தூரி, நிதாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் த. சாயிஸ்ருதியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
இலங்கைநாயகம் (மகன்).

*வளாக வீதி, திருநெல்வேலி.* (26397)(31-11-16)

## கஜமுகா சூரன் போர்

சாவகச்சேரி,டிசெ.27

குடாநாட்டில் உள்ள விநாயகர் ஆலயங்களில் விநாயகர் விரத பூர்த்தி விழா - கஜமுகா சூரன் போர் - இன்று சனி பிற்பகல் நடைபெறவுள்ளது.


**வெளிவந்துவிட்டது!**

2004 ஆம் ஆண்டு
புதிய பாடத்திட்டம்
கணிதம்
செயல் நூல்
தரம் 6

ஆக்கம்: M. சிவராசா




ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.


## காணாமற் போய்விட்டது

இல. 211/23, கோயில் வீதி, நல்லூரைச் சேர்ந்த ஜேகதாசன் குபேந்திரன் என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம், தேசிய அ. அட்டை (இல. 843402399V), 5 A.T.M அட்டைகள் என்பன அடங்கிய பணப்பை ஒன்று மானிப்பாய்க்கும் யாழ்ப்பாண நகரத்திற்கும் இடையில் காணாமற்போய்விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொலைபேசி இல. 0777 842432
0777654708

(26388)(16-31-11)


தரம் 5 புலமைப்பரிசில் 2004
சுந்தர் வெளியீடு
(பரீட்சை நிலையம்)

எமது நிறுவனத்தில் ஞாயிறு தோறும் மேற்படி நிறுவனப் பரீட்சை நடைபெறும்
வெளிமாணவர் அனுமதியுண்டு
வினாத்தாள் மீட்டலுடன்
முதல் மூவருக்கு பரிசிலும்
பத்திரிகைப் பாராட்டும்

பரீட்சை ஆரம்பம்
28.12.2003
ஞாயிறு காலை 9.00மணி

நாவலர்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.
சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :
த. குமாரசாமி அன் சன்ஸ் .
248/1. கே.கே.எஸ்..வீதி.
யாழ்ப்பாணம்.
(26385)(16-31-11)

லஷ்சுமி சினிமா இணுவில்
சிம்ரன் மற்றும் புதுமுகங்கள் நடித்த
கோவில் பட்டி வீரலட்சுமி (ரீலஸ்)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பி.நே.)
(26264)(32)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், சிமாசன் மற்றும் பலர் நடித்த
புதிய கீதை (ரீலஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 7.மணி

லிபேட்டி அச்சுவேலி



விஜய்,
ஜோதிகா,
நடித்த
திருமலை (ரீலஸ்)
காட்சிநேரம்: 10.30, 2.00, 6.30. (பி.நே.)
(C/31621)(32)

நிறஞ்சனாஸ் சங்கானை
MGR நினைவு தினத்தை முன்னிட்டு விசேட காட்சியாகக் காண்பிக்கப்படுகின்றது.
M.G.R இருவேடம், ஜெயலலிதா நடித்த
குடியிருந்த கோயில்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.) (ரீலஸ்)
வெள்ளி சனி ஞாயிறு
JOHNNY ENGLISH
இரவு 8.45 இருந்து (பி.நே.).

ராஜா யாழ்ப்பாணம்
தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18 (ரீலஸ்)
காட்சிகள்:
10.30 2.30,6.30,9.30 (பி.நே.)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.





# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருஷ்ணபிள்ளை தங்கரத்தினம்

தெல்லிப்பழை, அம்பனை வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ் - நாச்சிமார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கி. தங்கரத்தினம் அவர்கள் 25.12.2003 வியாழக்கிழமை இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை கிருஷ்ணபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் கி.குணாளசிங்கம் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட திட்டமிடல் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும் இந்திரேஸ்வரியின் அன்பு மாமியாரும் மயூரன், முகுந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பா.மகேஸ்வரி, சி.பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சு.பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2003) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*547, காங்கேசன்துறை வீதி,*
*நாச்சிமார் கோவிலடி,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி: 021 222 3808*

தகவல்:
கி.குணாளசிங்கம் (மகன்).

(26386)(31-11-16)

## அம்பலவாண முதலியார் நித்தியானந்தராசா

வட்டு. கிழக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த அம்பலவாண முதலியார் நித்தியானந்தராசா நேற்று (26.12.2003) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பத்மாவதி ஆகியோரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற அன்னலக்சுமியின் அன்புக் கணவரும் சிரதியின் அருமைச் சகோதரனும் செ.சிவராஜசேகரத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2003) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனகக்கிரியைக்காக வழக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு. கிழக்கு,*
*சித்தன்கேணி.* (சி-31969)(31-11-16)

தகவல்:
வே.இந்திரசீலன் (சகோதரன்)

## சுப்பிரமணியம் (மாணிக்கர்) கிருஷ்ணபிள்ளை

(வர்த்தகர் வாழைப்பழக்கடை - திருநெல்வேலிச் சந்தை)

இடைக்காடு, கலட்டித் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் (மாணிக்கர்) கிருஷ்ணபிள்ளை அவர்கள் 25.12.2003 வியாழக்கிழமை இறைபதம அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மாணிக்கர்) - செல்லாச்சி ஆகியோரின் அன்பு மகனும் தேவநாயகியின் அன்புக் கணவரும் கலைவாணி (சாவகச்சேரி பிரதேச சபை - கொடிகாமம்), தர்சினி (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி 2002 கலைப்பிரிவு), றாஜினி (மாணவி, யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோன்மணியின் அன்புச் சகோதரரும் செல்வராஜாவின் மைத்துனரும் சண்முகராஜ் (கனடா), கிரிசாந்தி (சுவீடன்), விமல்ராஜ், தர்மினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞான வைரவர் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
த.செல்வராஜா (மைத்துனர்).

(26394)(31-11-16)

## முருகேசு சின்னத்தம்பி

வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு சின்னத்தம்பி அவர்கள் நேற்று (26.12.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்பு மகனும் செல்லமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, காங்கேசு, மயில்வாகனம், இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கட்டயர் - தெய்வானை ஆகியோரின் அன்பு மருமகனும் செல்வனேஸ்வரி, செல்வேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தர்மலிங்கம், நகுலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும் உமாதேவி, ரவீந்திரன், யாழினி, காந்தரூபன், நளினி, அன்பரசன், விஜயகுமார், கமலினி ஆகியோரின் அன்புப் பேரனாரும் திசாந்தினியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2003) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை வடக்கு -5*
*சோளாவத்தை.* (26393)(31-11-16)

தகவல்:
செல்வேந்திரன் (மகன்).

## கந்தையா மயில்வாகனம்

சங்குவேலி தெற்கு ,மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மயில்வாகனம் நேற்று (26-12-2003) வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞசென்ற பூபாலசிங்கம், செல்லம்மா மற்றும் இராசரத்தினம் பொற்கொடியின் சகோதரரும் இராஜதுரை (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்), மகிழ்மலர் ஆகியோரின் மைத்துனரும் ஞானமணி (திருகோணமலை), இராஜேந்திரன் (கணக்காளர், நிக்கொட், முல்லைத்தீவு), தேவராஜா (ஹற்றன்), தவமணி, பாலேந்திரா, செல்வச்சந்திரன் (பிரான்ஸ்), பாஸ்கரன் (இலங்கை மின்சாரசபை) இராகினி (ஜேர்மனி), விவேகச்சந்திரன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாக்கியதுரை (தொழில்நுட்ப உத்தியோகத்தர் R.R. Group pvt. திருகோணமலை), வசந்தா, தனலட்சுமி (உப அதிபர், ஹற்றன்), பரராஜசிங்கம் (மல்லாகம் நீதிமன்றம்), ரஜனி, வேணி (பிரான்ஸ்), தயாநிதி (ஆசிரியை), சர்வானந்தம் (ஜேர்மனி), சாந்தினி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரா, பிரவீனா, கோபினா, குமணா, ஆர்த்திகன் தர்ஸிகா, அஜந்தன், லக்சிகா, துவாரகா, தாரணி, சுபாங்கி, கஜானி, துசியந்தன், சரங்கியா, மாதங்கி, சங்கவி, ராகவி, லக்சன், அபிநயா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-12-2003) சனிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி தெற்கு,*
*மானிப்பாய்.* (26400)(31-11-16)

தகவல்:
பிள்ளைகள்.

# தலை துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் யுவதியின் சடலம் கிளிநொச்சியில் மீட்பு!

## யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகக் கொண்டவர்

கிளிநொச்சி கந்தன் குளப் பகுதியில் தலை துண்டிக்கப்பட்டு அழுகிய நிலையில் யுவதி ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

உரும்பிராய் வீதி, கோப்பாயை சொந்த முகவரியாகவும் இல.234, கட்சன் வீதி, வட்டக்கச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இரத்தினசிங்கம் பிறின்ஸி (வயது 19) என்ற யுவதியின் சடலமே அது எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டது.

கந்தன் குளம் கலிங்குப் பகுதியில் துர்நாற்றம் வீசியதையடுத்து அங்கு சென்ற அப்பகுதி மக்கள் சடலத்தைக் கண்டுள்ளனர்.

இதுகுறித்து கிளிநொச்சி காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு வந்த காவல்துறையினர் சடலத்தை மீட்டனர். சடலத்துக்கு அருகில் பிரயாணப் பை ஒன்றும் புகைப்படங்கள், உடுபுடைவைகள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டன. கிளிநொச்சி காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## திருவாசக முற்றோதல்

காரைநகர்,டிசெ.27

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் திருவாசகம் முற்றோதலும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும். (எ)


BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
புதிய பிரிவு
சரளமாக உரையாட சிங்களம்
By: லீலாக்கிருஸ்ணன்
இன்று ஆரம்பம் 27.12.2003 SAT. 4.30.p.m.
(26236)(30)

பொருளியலின் குறையினை பொருளியல் பாடத்தில் சிறப்புப் பெற்றோரால் மட்டுமே நிவர்த்தி செய்ய முடியும்.
பொருளியல்
திரு.விக்கி B.A.(Hons) Econ Spl
ஆரம்பம்: 27-12-2003
வழமையான நேரப்படி
SCIENCE COLLEGE
யாழ். நகர்
(26317)(30)

BEACON STUDY CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2006
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 01-01-2004 (வியாழன்)
மு.ப. 9.00 மணி
★ எமது வழமையான ஆசிரியர் குழு
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளலாம்.
(26284)(32)

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
இணைந்த கணிதம்
A/L - 2006
சனி, ஞாயிறு வகுப்புகள்.
ஆரம்பம் :- 28-12-2003
(நேரம் காரியாலயத்தில் பெறவும்)
By: ப.செந்தில்நாதன் B.Sc.
(26358)(30)


# ஈரானில் பூகம்பப்....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

டுள்ளனர். வைத்தியசாலையில் தாக்குப்பிடித்து எஞ்சி நிற்கும் ஒரு சில கட்டடங்களும் காயமுற்றோரால் நிரம்பி வழிகின்றன.

இதனால், காயமுற்றோர், கிடைத்த வாகனங்கள் மூலம் தொலைவிலிருக்கும் ஏனைய நகரங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகச் சிறப்பு மிக்கது பாம் நகரம். அங்குள்ள 16 ஆம் நூற்றாண்டின் கோட்டையும் அதைச் சுற்றியுள்ள அக்கால வீடுகளும் புராதனச் சிறப்பு மிக்கவை. ஆனால் அவை இன்று இல்லை. நேற்றோடு - கோட்டை உட்பட வரலாற்று சிறப்பு மிக்க வீடுகள் அனைத்தும் - தரை மட்டமாகிவிட்டன.

பெரிய பூமியதிர்ச்சி விட்டு விட்டு மூன்று தடவைகள் இடம்பெற்றது. அதன் பின்னரான சிறிய அதிர்வுகள் அவ்வப்போது தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதால் இந்தப் பூகம்பத்தில் தப்பிப்பிழைத்த மக்கள் எஞ்சியிருக்கும் கட்டடங்களுக்குள் செல்வதற்கோ, இடிபாடுகளுக்குள் புகுந்து அங்குள்ளோரை மீட்கும் முயற்சியில் ஈடுபடவோ அஞ்சுகின்றனர். குளிர் மற்றும் மோசமான காலநிலைக்கு மத்தியில் வெட்ட வெளியில் அவர்கள் தங்கியுள்ளனர்.

மீட்கப்பட்ட நூற்றுக்கணக்கான சடலங்கள் ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்டுவிட்டன. அப்பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

காயமுற்றோருக்குச் சிகிச்சையளிப்பதற்கு வசதியாக இரத்ததானம் செய்யும்படி பகீரங்கக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

முன்னெப்போதுமில்லாத மனிதப் பேரவலத்தைச் சந்தித்திருக்கும் ஈரானுக்கு அவசர உதவிகளை வழங்குவதற்குப் பலநாடுகள் தயாராகி வருகின்றன.

(முன்னர் வந்த செய்தி 03 ஆம் பக்கத்தில்)

# பண்ணைக்....

(முன்பக்கத்தொடர்ச்சி)

களும் வானுக்குள் இருந்தவர்களைக் கடும் சிரமத்தின் மத்தியில் மீட்டு வெளியே கொண்டுவந்தனர். காயப்பட்டவர்கள் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றி வந்தமையே வான் நிலை குலைந்து குடைசாய்வதற்கான காரணமாக இருக்கலாம் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. விபத்துக்குள்ளான வான் சாரதி மற்றும் அது உரசப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் ஜஸ்கிறீம் வான் சாரதி ஆகியோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இன்று அவர்கள் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவர்.

விபத்தில் காயமடைந்தவர்களான கிருபானந்தம் நிதர்சன் (வயது 3 - அனலைதீவு), கிருபானந்தம் யோகராணி (வயது 30 - அனலைதீவு), வி.றோகினி (வயது 30 - அனலைதீவு), உதயகுமார் சாம்பவி (வயது 3 - ஆறுகால்மடம்), ஐயன் செல்லையா (வயது 60 - அனலைதீவு) ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வான் நடத்துநரான தியாகராஜா கௌதம் (வயது 22 - ஊர்காவற்றுறை), க.குமரேசன் (வயது 63 - அனலைதீவு) ஆகிய இருவரும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். (ம-3-6-15-38)


31 ஆம் நாள் நினைவஞ்சலி


அமரர் இரத்தினேஸ்வரன் சுகுமார் (நிரஞ்சன்)

தோற்றம் - 25.06.1978
மறைவு - 25.11.2003

*நெஞ்சமெல்லாம் நிறைந்தவனே நிரஞ்சா!*
*நாம் வாழும் காலம்வரை நீயும் வாழ்வாய்.*

இன்று (27.12.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

8ஆம் வட்டாரம், மண்டைதீவு.
(26403) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னரத்தினம் தம்பிராசா

மட்டுவில் தெற்கு சிவன் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னரத்தினம் தம்பிராசா நேற்று (26.12.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (28.12.2003) ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.கதிர்காமநாதன் (மகன்),
சி.தர்மகுமார் (மருமகன்).
நாவலடி வீதி,
திருநெல்வேலி மேற்கு.
(26407)

## மூன்றாவது நாளாக எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரசாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

தமிழீழ சுகாதார சேவைப் பிரிவும் அரசியல்துறையும் இணைந்து குடாநாட்டில் மேற்கொண்டுவரும் எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகள் மூன்றாவது நாளாக நேற்றும் மும்முரமாக இடம்பெற்றன.

தெல்லிப்பழை பிரதேசத்தில் மல்லாகம், அளவெட்டி மேற்கு, தெற்குப் பகுதி வீடுகளிலும், தனியார் கல்வி நிலையங்கள் நலன்புரி நிலையங்கள் ஆகியவற்றிலும் பரப்புரை இடம்பெற்றது. நீர்வேலிப் பிரதேசத்தில் புத்தூர், வாதரவத்தை, அச்சுவேலி, இடைக்காடு, உரும்பிராய் ஆகிய கிராமங்களில் உள்ள வீடுகளில் பரப்புரைகள் நடத்தப்பட்டன.

சங்கானை பல நோக்குச்சங்க உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு பரப்புரைகள் வழங்கப்பட்டன. வட்டுக்கோட்டைப் பகுதியில் வீடு வீடாகச்சென்று பிரசாரம் நடத்தப்பட்டது.

மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய் கிராமங்களிலும் பரப்புரைகள் இடம்பெற்றன. மானிப்பாய் பிரதேச மண்டபத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வு சம்பந்தமான கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

உடுவில் பிரதேசத்தில் சுன்னாகம், ஏழாலை, உடுவில், இணுவில், புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் பல இடங்களிலும் எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெற்றன.

வடமராட்சியில் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் பல்வேறு மட்டங்களிலும் விழிப்பூட்டல் செயற்பாடுகள் இடம்பெற்றன.

இதேவேளை -

இன்று காலை 10 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் இது குறித்த கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-4)


PHYSICS
BY.K. Sivalingam
2006 Batch
ஆரம்பம்: 01-01-2004 8 a.m.
தொடர்பு:- இல.1,
சிவப்பிரகாசம் றோட்,
வண்ணார்பண்ணை. (26300)

ஈசன்
கல்வி நிலையம்
A/L 2006
வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்:
05.01.2004 8.30 a.m.

RAM CD WORLD
மலிவு விற்பனை
27.12.2003 முதல் 31.12.2003 வரை
ஓடியோ CD 80/=
வீடியோ CD 100/=
வீடியோ CD (படம்) 180/=
ராம் CD வேல்ட்
120, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (26378)

BRIGHTEN
சங்கத்தானை
SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY:MR.K.NISHANTHAN
புதிய பிரிவு ஆரம்பம்
29.12.2003 திங்கள் 2 p.m.
வெள்ளி 5 p.m.
குறிப்பு: பிரிவு I, பிரிவு II
வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகிறது.
(26310)


## மரண அறிவித்தல்கள்

### அருச்சுனன் சிவராசா (காரைநகர்)

ஆலடி பென்னம்பலம் பலம் வீதி, காரைநகரைச் சேர்ந்த அருச்சுனன் சிவராசா நேற்று (26.12.2003) வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் அமரர் அருச்சுனன் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் (ஆசிரியை - விபுலானந்தா மகாவித்தியாலயம், வவுனியா) அன்புக் கணவரும் சோமசுந்தரம், சண்முகநாதன், சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவகுமார் (IDA - பிரதிப்பணிப்பாளர்) சுப்பிரமணியம், சிவசோதி, சிவபாலன், காலஞ்சென்ற தெய்வநாயகி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியாவில் நடைபெறும்.

*4ஆம் ஒழுங்கை,*
*பண்டாரிக்குளம், வவுனியா.*
T.P: 0777-671550 (26406)

தகவல்:
து.சிவசோதி,
(இரசாயனவியல் ஆசிரியர்).

### அருள்பிரகாசம் பாஸ்கரன்

உரும்பிராய் கிழக்கு, சுதந்தனைச் சேர்ந்த அருள்பிரகாசம் பாஸ்கரன் அவர்கள் நேற்று (26.12.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அருள்பிரகாசம் (ஓய்வுபெற்ற C.T.B.சாரதி) - அலங்காரம் ஆகியோரின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் டீன் சுதாகரன், பொறின்சுதாபால், டையன் சுகோததிரா, டென்சிகுமாரிகா, சுபின்ரன் காஞ்சனா, பிரேமசியா, கிங்சின் வேணி, றெஜினியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரிசானா (ஜேர்மனி), பத்மாவதி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரரும் வானதியின் மாமனாரும் டிலக்ஸன், டிலோஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*சுதந்தன்.* (26404)

தகவல்:
டீன் சுதாகரன் (மகன்)


ஆற்றுகையாளர்கள் தேவை



தொழில் சார் அரங்கச் செயற்றிட்டம்
(Professional Theatre Work)

TRRO நிறுவனத்தின் துணை நிறுவனமாக இயங்கிவருகின்ற செயற்றிறன் அரங்க இயக்கம் Active Theatre Movement சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து நாடகமும் அரங்கியலும் துறையை அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக கடந்த பல ஆண்டுகளாகப் பயன்படுத்தி வருகின்றது.



2004/2005 ஆம் ஆண்டுகளில்
அபிவிருத்திக்கான அரங்கு
Theatre For Development
(TfD)

சமுதாய அரங்கு
Community Theatre
தெருவெளி அரங்கு
Street Theatre
சிறுவர் அரங்கு
Children's Theatre

என்ற அரங்க செயற்றிட்டமொன்றினை (Theatre Project) ஆரம்பிக்கவுள்ளது. இச் செயற்பாட்டின் முழு நேர/பகுதிநேர ஆற்றுகையாளர்களாக (Performers) பங்குபற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மூன்று மாத காலம் நடைபெறும் பயிற்சிகளில் பங்குபற்றி சித்தியடைவோர் ஆற்றுகையாளர்களாக இணைத்துக்கொள்ளப்படுவர்.

ஆற்றுகையாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு - 8000/=

வேண்டப்படும் அடிப்படைத் தகைமைகள்
✦ G.C.E. A/L பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
✦ நாடகமும் அரங்கியலும் துறைசார் அனுபவம்.
✦ G.C.E. A/L நாடகமும் அரங்கியலும் பாடத்தில் தோற்றி சிறப்புச் சித்தி பெற்றிருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
✦ வயதெல்லை: 20 - 30.

விண்ணப்ப முடிவு திகதி : 05.01.2004
சுயவிவரங்களுடன் நேரிலோ தபால் மூலமாகவோ தொடர்புகொள்ளவும்.
தொடர்பு முகவரி:
செயற்றிறன் அரங்க இயக்கம்
Active Theatre Movement
அருளகம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(C-31973)(30-14-18)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.